
# தாயகம்






1- Dec. 2001

20/-

தேசிய கலை இலக்கியப் பேரவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இந்த இதழில்......


### கவிதைகள்

இராகலை பன்னீர்
சிவா
தணிகையன்
சாதனா
நீர்வைக் கலைவரன்
சூரியநிலா
கு.றஜீபன்
அழ. பகீரதன்
இராம ஜெயபாலன்
த. ஜெயசீலன்

### சிறுகதைகள்

உடுவில் அரவிந்தன்
யாதவன்
சேகர்
சித்திரா
சி. கதிர்காமநாதன்

### கட்டுரைகள்

பேராசிரியர் சிவசேகரம்
கல்வயல் குமாரசாமி
இரா. சடகோபன்
வே. சேந்தன்
புவியன்.



# தாயகம்

புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய பண்பாடு

01 – 12 – 2001 இதழ் 43


# மக்களும் அரசியலும்

ஓராண்டு இடைவெளிக்குள் மீண்டும் தேர்தல் வருகிறது சுதந்திர இலங்கையின் 12வது தேர்தல் இது அரைநூற்றாண்டுக்கு மேலாக காலனித்துவ வாதிகளிடமிருந்து பெற்ற முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தால் மக்கள் பெற்ற பெறுபேறுதான் இம் மண்ணில் நீண்டு தொடரும் யுத்தம்.

இந்த யுத்தத்தின் பேரழிவுகளுக்கு மத்தியில் இருந்து தேர்தலை எதிர்நோக்கும் மக்களிடம் இரத்தம் தோய்ந்த அநுபவங்களால் பெற்ற அரசியல் அறிவும் விழிப்புணர்வும் ஏற்பட்டிருக்கவேண்டும் ஆனால் தேர்தல் கால சந்தர்ப்பவாதக் கூட்டுக்களும், தேர்தல் திருவிழாக் கூத்துக்களும் பழைய கதையையே மீண்டும் இம்மண்ணில் தொடரவைக்கின்றன.

ஒருபுறம் வாக்குச்சீட்டின் பெறுமானம் என்பது - சுதந்திரம்- சுபீட்சம் எமது சந்ததியின் நலமான எதிர்காலம் என்பதாக இல்லாமல் வாக்காளரின் உடனடி இலாபமாக – வருமானமாக-- விலைபேசப்படும் சூழல் உருவாகியுள்ளது.

மறுபுறம் பாராளுமன்ற ஆசனங்களை கருத்திற்கொண்ட வெறும் தந்திரோபாய அரசியலுக்கான - கூட்டுக்கள் - நகர்வுகள் மக்களை அரசியல் விழிப்புணர்வற்ற வெறும் மந்தைகளாக எண்ணி வழிநடத்த முனைகின்றன.

நீண்டு தொடரும் யுத்தத்துக்கு எதிராக சமாதானம் பேச்சு வார்த்தை என்பது தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல இனமதபேதமின்றி அனைத்து மக்களது குரலாகவும் ஒலித்து வருகிறது. தேர்தல் காலத்தில் இவற்றை தமக்கு மூலதனமாக்கும் பேரினவாதிகள் அதிகாரத்தில் அமர்ந்தும் எதிராகச் செயற் படுகிறார்கள்.

இதற்கு எதிராக ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் மத்தியில் வலுவான ஒற்றுமை ஏற்பட வேண்டும். அதுவும் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான விடுதலைப்போராட்டம் நடைபெற்று வரும் காலகட்டத்தில் - பாராளுமன்ற ஆசனப் பகிர்வுக்கு அளவான--சந்தர்ப்பவாத அரசியல் கூட்டுக்களின் ஒற்றுமை அல்ல பரந்துபட்ட தமிழ் மக்களின் ஒற்றுமையைப் பலப்படுத்துவதாக அது அமையவேண்டும். மக்கள் தமது உரிமைகளை தமது சொந்தக கால்களில் எழுந்து நிற்று பெறுகின்ற அரசியல் வழிப்புணர்வுடன் கூடிய ஐக்கியமாக அது அமையவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இக்கொடிய யுத்தத்தின் அழிவுகள் இழப்புக்கள் இடிபாடுகளின் சுவடுகள் மறையும் முன்பே அதே யுத்தத்தை மக்கள் மீது திணித்த பேரின வாதிகளின் கொடிகளையும் பதாகைகளையும் மக்கள் எவ்வித உணர்வுமின்றி இந்த மண்ணிலேயே ஏந்திநிற்கும் இழிவுநிலை இச்சந்தர்ப்பவாத அரசியல் அவர்களை இட்டுச் சென்றுள்ளது. ஐம்பது ஆண்டுகளுக்க மேலான பேரப்பேச்சு அரவியலின் தந்திரோபாய நகர்த்தல்களின் தொடர்ச்சி இது.

மக்களாட்சி ஜனநாயகம் என்று கூறிக்கொண்டாலும் ஊடகங்களுக்கூடாக மக்களது கருத்தை உருவாக்குவதிலும் வாக்குக்களைப் பெறுவதிலும் பணபலம், ஆதிக்கபலம், பழமைவாத சாதி மதச் சிந்தனைகளின் பக்கபலம் என்பவையே பெரும்பங்கை வகித்து வருகின்றது.

இதனால் இத்தகைய அதிகார பலங்களைக் கொண்ட மக்கள் தொகையில் ஐந்துவீதத்துக்கும் குறைவான ஆண்ட பரம்பரையினரே தொடர்ந்தும் ஆட்சிக்கு வருகின்றனர். சேனநாயக்க, பண்டாரநாயக்க பரம்பரையில் வந்தவர்களினால் தான் இன்றும் ஆட்சியைத் தக்கவைக்க முடிகிறது. இவர்களது வர்க்க நலன்களிலிருந்தே பேரினவாதம் ஊற்றெடுத்து வந்துள்ளது.

இவர்களது ஆட்சியில் பிரதான இலக்கு சாதாரண தமிழ், சிங்கள், முஸ் லீம்மக்களது சுதந்திரம் சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வு அல்ல. தமது அதிகாரத தையும் ஆதிக்க நலன்களையும் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் நலன்களோடு இறுகப்பிணைத்துக் கட்டிடிக்காப்பதுதான்.

மக்கள் தொகையில் ஐந்து வீதத்திற்கும் குறைவான ஆண்டபரம் பரையினரின் இவ் ஆதிக்க நலன்களுக்குப் பதிலாக தொன்னூற்றைந்து வீதமான சாதாரண மக்களின் நலன்களிலிருந்து அரசியல் முன்னெடுக்கப்பட்டிருந்தால் சாதி, இன, மத, வேறு பாடின்றி ஒன்றுபட்டெழும் அந்த மக்கள் சக்தி- தமக்குள் ஒரு வரது உரிமையை ஒருவர் மதித்து ஒன்றுபடுவதுடன் -ஆதிக்க சக்திகளின் அரசியல் நலன்களையும் கேள்விக்கு உட்படுத் தியிருக்கும்.

சாதாரண தமிழ் சிங்கள, முஸ்லீம் மக்கள் தமக்கு எதிராக அரசியல் விழிப்புணர்வு பெற்று ஒன்றுபட்டெழுவதை தடுப்பதற்கே காலனித்துவவாதிகள் கையளித்துச் சென்ற பாராளுமன்ற முறைமை யையும் இனரீதியாக மக்களைப் பிரித்தாளும் தந்திரத்தையும் இன்றுவரை பின்பற்றிவருகின்றனர். தமிழ் தலைமை களும் தமது நலன்களுக்கு ஏற்ப இனவாதத்திற்கு பதில் இனவாத அரசியல் முன்னெடுத்து வந்ததன் மூலம் அவர்களுக்கு ஒத்துழைப்பை நல்கி வந்துள்ளனர். இதுவே பேரினவாத யுத்தமாக மாறி மக்களை இன்று காவு கொள்கின்றது.

குண்டுச்சட்டிக்குள் தொடர்ந்து குதிரை ஓட்டும் இவ் இனவாத அரசியலின் விளைவு இது. இதினின்று விடுபட்டு- இனவிடுதலை அரசியலை முன்னெடுப்பது மட்டுமல்ல ஏனைய சமூக ஒடுக்கு முறைகளுக்கும் உலகரீதியான ஏகாதிபத்திய ஒடுக்கு முறைகளுக்கும் எதிரான புதிய அரசியல் மார்க்கத்தைப்பற்றி மக்கள் இன்று சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

---

எமது பொருளாதார கலாச்சார வாழ்வு மட்டுமல்ல ஒடுக்கு முறையாளர் களின் ஆதிக்கம் கூட உலகமயமாகிவரும் கலாகட்டத்தில் மக்களை அரசியல் மந்தைகளாக எண்ணி வழிநடத்த முனைவது தவறு. எனவே அரசியல் பற்றி மக்கள் சிறிதளவாவது அக்கறை கொள்ளும் தேர்தல் காலங்களலாவது அரசியல் விழிப்புணர்வையும், ஒடுக்குமுறைகளுக்கெதிரான வெகுஜன எழுச்சிக்கான உணர்வையும் ஏற்படுத்துவது நன்று. இதனை முன்னெடுக்கும் அரசியல் சக்திகளை இத் தேர்தல்கள் மூலம் தலைப்படுத்த மக்கள் முன்வரவேண்டும்.



# செம்மணிச் சிந்து

சூரிய கந்தையும்
செம்மணியும் நம்
தேசத்தின் சோகங்கள் சோதரனே
ஆளும் அரச கூலிப்படைகளின்
ஈனப்படு கொலை சோதரனே.இது
ஈனப்படு கொலை சோதரனே

அதிகாரத் திமிரெனும்
ஆணவத்தாலிந்த
அழிவுகள் நடந்தனவாம் – –வெறி
அடங்காத கரங்களின்
வேட்கையினாலிந்த
வெறியாட்டம் நிகழ்ந்ததுவாம்...இந்த
வெறியாட்டம் நிகழ்ந்ததுவாம்.

பாழுங் கிணறுகள்
பாதை வெளிகளும்
புதைக்குழியானதுவாம் – –இந்த
பாதகர் செய்திட்ட பாதகத்தால் நாடு
பாழ்பட்டு நின்றதுவாம் – –கெட்டு
பாழ்பட்டு நின்றதுவாம்.

பச்சைப்பசேலென
பயிர் விளையும் எங்கள்
வியர்வையினால் இந்த நிலம் விளையும்
விளையுண்ட நிலமெங்கும் பிணம்
விளைய யிவர்
விந்தை புரிந்தார் இலங்கையிலே..இவர்
விந்தை புரிந்தார் இலங்கையிலே.

சிங்களத்தாயவள்
சிந்திய கண்ணீர
சூரியக்கந்தையிலாம்
தமிழன்னை கதறுதல்
கண்டோமிங்கு
செம்மணிப் பகுதியிலாம்--அந்த
செம்மணிப்பகுதியிலாம்.

கண்ணீரில் பேதங்கள்
கண்டவர் யாருளர்
கண்டவர் சொல்லுங்களேன்...எங்கள்
உரிமைகள்மீட்டிட எல்லோரும்
எழுந்து நில்லுங்களேன் – ஒன்றாய்
எழுந்து நில்லுங்களேன்

செம்மணி சூரிய
கந்தைத் துயரங்கள்
இனி வரவே வேண்டாம் வரும்
காலக்குழந்தைகள் வருந்தியழும் நிலை
வந்திடவும் வேண்டாம் – இனி
வரவிடவும் வேண்டாம்

*- இராகலை பன்னீர் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சனம் பற்றி

**-சிவசேகரம்-**

மாலை வானிடம்

சிவப்பு நிறமொன்று கேட்டேன்.

பல நூறு செந்நிறங்களை என்முன் விரித்தது

நான் விரும்பும் செந்நிறம்

இதில் இல்லையே என்றேன்.

வருந்தி முகங்கறுத்து இருளிற் புதைந்தது.

காலை வானிடம்

சிவப்பு நிறமொன்று கேட்டேன்

பல நூறு செந்நிறங்களை என் முன் விரித்தது.

நான் விரும்பும் செந்நிறம்

இதில் இல்லையே என்றேன்.

என்னால் இயன்றது இவ்வளவே என்று

பொன்னாக முறுவலித்து

ஒளிவெள்ளத்திற் கலந்தது.





## பசி

அந்த நீண்ட மண்டபத்தின் வெளிப்புறச் சுவரோரம் சுமார் நூறுபேரளவில் நின்றிருந்தார்கள். வெவ்வேறு உயரங்களில் நடப் பட்ட பூங்கன்றுகளைப் போல பெரியவர்களும் சிறியவர்களு மாக அந்த வரிசை அமளிப் பட்டது கலைந்த தலைகளும் அழுக்கை நன்றாக அப்பிக் கொண்ட கிழிந்த உடைகளும் அவர்களிடமுள்ள இருப்பின் நிலை யைக் கூறின. மண்டபத்தின் நுழைவாயில் மூடப்பட்டு ஒற் றைக் கதவு மட்டும் திறந் திருந்தது.

அதை மறைத்தபடி பெரிய தொந்தியுடன் ஒருவர் நின்றிருந்தார். வரிசையில் நிற்பவர்களை இடையி டையே ஏசி அடக்குவதன் மூலம் அந்த இடத்தில் தன்னுடைய முக்கியத்துவத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார் அவர். மண்டபத் துக்குள்ளே பிரார்த்தனை நடை பெறுகின்றது என்பதற்கு அறி குறியாக மணியொலியும், மந்திர உச்சாடனமும் எங்கும் வியா பித்துப் பரவின. சுவரின் மேலே பதிக்கப்பட்டிருந்த கம்பி வலையினூடாக வெளிவந்த சாம் பிராணிப்புகை இவனுடைய நாசிக் குள் ஏறி அரித்தது.

இவனுக்கு நன்றாக பசிக்கத் தொடங்கியது. இந்த அன்ன தானத்தை நம்பியே இவனுடைய வீட்டில் இரு உயிர்கள் பட் டினியாகக்கிடக்கின்றன. அது வேறு இவன் மனதை வாட்டியது.

வெறுமையாக கிடந்த வயிறு வண்டுகள் புகுந்ததுபோல இரைந் ததும் தலையை விறாண்டியபடி பெரிதாகக் கொட்டாவி விட்டான்.

**உடுவில் அரவிந்தன்**

அம்மாவின் நினைவு எழுந்தது. "பாவம் அம்மா, எவ்வளவு கஸ் டப்படுகிறா. ஒரு நேரம் சாப்பிடாத எனக்கே இவ்வளவு பசியெண்டா நேற்று இரவு முழுக்க ஒண்டுமே சாப்பிடாமல் கிடக்கிற அம்மாவுக்கு எவ்வளவு பசிக்கும்?" பன்னிரண்டு வயதின் இளமுதிர்வில் மனம் இரும் பாகக் கனத்தது. சுவரோடு நன்றா கச் சாய்ந்து கொண்டான்.

விழிகள் வீதிக்கு அப்பால் வெகு தொலைவிலே தெரியும்குடிசைவரை நீண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலடிச் சுடலைக்கு அருகில் தாழ்ந்த பிரதேசத்திலிருக்கும் அந்தக் குடிசைகளில்.

ஒன்றிலேதான் இவன் குடியிருக்கிறான். மணல் பரந்த வெள்ளவாய்க்கால் இவனைச் சார்ந்தவர்கள் வாழும் பள்ளத் திலே போய்த் திறக்கிறது அதுவே அவர்களுடைய குடிசை களுக்குச் செல்வதற்கான பாதை யும் கூட. மழைக்காலத்தில் வாய்க்காலில் வெள்ளம் சுழித் துப்பாயும். அப்போது நீரோட டத்தின் விளிம்பிலுள்ள கரடு முரடான கற்களிலேயே அவர் களின் பயணம் தொடரும்.

வெள்ளத்தோடு அள்ளுண்டு வரும் சிறுமீன்களைத் தூண்டில் போட்டுப் பிடிப்பதில் இவனுக்கு விருப்பம் அதிகம்.

தன்னிலும் பார்க்க சிறுவயது கூடிய "அண்ணைமாருடன்" சேர்ந்துதிருட்டுத்தனமாக நீந்து வதும், வாளைக் குற்றி கழை இணைத்துத் தெப்பமாக மிதக்க விட்டுஅதிலேறி குளம் வரை போய் வருவதும் அளவற்ற ஆனந்தத்தை அள்ளித்தரும்.

இப்போது வாய்க்கால் காய்ந்து புழுதி பறக்கிறது இவர் களுடைய வரண்ட வாழ்க்கை யைப் போல. இன்று காலை யில் நிகழ்ந்தது இவனுடைய நினைவிலே பாசியாக படர்கிறது குடிசையின் மண் தரையில் நிலத்தை

வெளிக்காட்டிய பாயிலே படுத்த படி. கண்கள் நிறைந்த முகட்டினூடு பளபளத்த வானத் தைப் பார்த்துக் கொண்டிருந் தவன் குசினிப்பக்கம் திரும்பினான்.

தேநீர் தயாரிப் பதற்க்கான எந்த விதச் சலனமும் அங்கு இல்லை.

மெல்ல எழுந்து வாசலுக்கு வந்தான் இமை களை இறுக்கிய உறக்கத் தினை விரட்டும் நோக்கில் பீளை பிதுங்கிய கண்களை அழுத்தித் துடைத்தான். வெளியே கப்போடு சாய்ந்தபடி பீடியை உறிஞ்சிக் கொண்டிருந்த இராசனைக் கண்டதும் இவனுடைய மனதில் வெறுப்பு விஷமாக ஏறியது பகல் முழு வதும் சிவப்பிரகாசம் ஐயாவின் தோட்டத்தில் நாரி முறிய உழைத்த பின்னர் கிடைக் கின்ற "பிடி கூலியில்" களைப் புத்தீரக் கழுத்து வரை குடித்து விட்டுவந்து வெறுமையான சட்டி பானைகளைச் சிதறடிக்கும் தகப்பனை நினைக்க இவன் மனதில் அன்பு பெருகுவ தில்லை

மறுபடியும் குசினிப்பக்கம் எட்டிப்பார்த்தான். உள்ளே அணைந்துபோன அடுப்போடு அண்டிய சுவருடன் சாய்ந்தபடி அசையாத விழிகளை மேலே நிறுத்தியிருந்தாள் இவனுடைய தாய். நேற்றிரவு அப்பாவின் ஆரவாரங்கள் முடிந்த பின்னர் இருந்தபழைய பாண் துண்டு களை

இவனுக்கும் தங்கைக்கும் தந்துவிட்டு. அம்மா அப்படியே சரிந்து அமர்ந்ததாக ஞாபகம்..

இராசனுடன் ஒப்பிடும் போது தோட்ட வேலைகள் அவளுக்குக் கிடைப்பது குறைவு. அப்படிக் கிடைக்கும் போதெல்லாம் மதிய உணவாக வழங்கப்படும் பாணைச் சுருட்டி எடுத்து வந்து பிள்ளை களுக்குக் கொடுப்பாள். பசிக்களையுடன் வீட்டுக்கு வந் தால் கடன் தொல்லைகள் எதிர்கொள்ளும். அவற்றையும் சமாளித்து நிமிர் பவளை கணவனின் குடிகாரத்தனம் ஒரேயடியாக அமுக்கிவிடும்.

தாயைப்பற்றிய பரிதாப உணர்வு இவனிட மிகுந்தது. அடித்தொண்டைக் குள்ளே கசந்த பித்தத்தைக் காறித் துப்பியவன் தண்ணீர்க் குடத்தை நோக்கி நடந்தான்.

தன்னை ஒருமுறை திரும்பிப் பார்த்து விட்டு பீடி யைச் சுவைக்கும் தகப்பனை ஓரக் கண்ணால் நோக்கியபடி குடத்தைச் சரித்து நீரைப்பருகி அயர்வுடன் நிமிர்ந்தான்.

சற்றுத் தள்ளி அரசடி வைரவருக்கு முன்பாக வுள்ள பள்ளத்தில் ஒரு உருவம் கல்லுடைத்துக் கொண்டிருப்பது இவனுடைய

விழிகளுக்கு புலப்படு கின்றது. சுத்தியலால் கல்லை அடிக்கும் ஒலி சீராக எழுகிறது. அந்த உருவத்துக்குரியவர் மாணிக்கப் பெரியையா என்பது இவனுக்குத் தெரியும். அவரைக் கல்லுத்தாத்தா என்றே இவன் அழைப் பதுண்டு.

அவருக்குக் கிட்டத்தட்ட வயது எண்பதாகிறது.

கண்ட கண்ட வியாதிகளும் இந்திய அமைதிப் படையும் அவருடைய குடும்பத்தவரை அள்ளிப்போனபின் கடந்த பத்து வருடங்களாகத் தனியாக வாழ்கிறார்.

பகல் முழுவதும் வெயிலில் நனைந்தபடி கூனிக் கொண்டு கல்லுடைப்பார். ஒவ்வொன்றாக உடைத்துக் குவிக்கும் கற்கள் மாளிகை களாக உருமாறினாலும் அவர் வாழ்வதென்னவோ ஓலைக் குடிசையிலேதான். "தனக்கு அது போதும்" என்று அடிக்கடி கூறுவார்.

இவனைக்காணும் போதெல்லாம் இடுங்கிய கண்களால் உற்றுப் பார்த்துப் புன்னகைப்பார். எவரிடமும் கடன் படாமல் தனது உழைப்பை நம்பியே வாழும் அவரை நினைக்க இவனுள் ஆச்சரியப்பறவை சிறகடிக்கும்.

மெல்ல பெருமூச்சு விட்டுக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று வாத்தியார் சொன்னது நினைவுக்கு வந்தது.

"சிவகுமார் நீ நாளைக்குப் புதுக் கொப்பி இல்லாமல் வரப்படாது கொப்பரிட்டச் சொல்லி நாலைஞ்சு கொப்பி வாங்கு" கொப்பி இல்லாமல் வகுப்புக்குப் போனால் வாத்தியார் மூங்கில் தடியால் விளாசி விடுவார் என்பது இவனுக்குத் தெரியும் அந்தக் கலக்கத்தைவிட தந்தையிடம் கேட்பதனால் ஏற்படும் விளைவு பற்றிய அச்சமே இவனுக்கு எழுந்தது

கற்பார் இடுக்கில் முளைத்திருந்தவேப்பஞ்செடியில் குச்சி ஒன்றை முறித்து வாயில் வைத்தபடி தந்தையை நோக்கி மெதுவாக நகர்ந்தான்

"அப்பா"..........

தொண்டைக்குள் அமிழ்ந்து ஒலித்தது இவனுடைய குரல் ஓரிரு தடவை பலமாக இருமிய இராசன் சளியை எட்டித்துப்பி விட்டு சாரத்தினால் வாயைத்துடைத்துக் கொண்டு திரும்பிப் பார்த் தான். பிறகு சொன்னான்.

"குமார் இண்டைக்கு கோவில் மடத்திலை அன்ன தானம் போய்ச் சாப்பிட்டு விட்டு சொப்பிங் பையினில் சாப்பாடு கொண்டு வந்து கொம்மாவிட்டக் குடு.

"அப்பா........

பள்ளிக்குடம்,.....

வாத்தியார்........

கொப்பி.........."

வார்த்தைகள் இவனுடைய வாயில் வளைய மறுத்தன கையிலிருந்த குறைபீடியை வீசியெறிந்தான் ராசன்.

"பள்ளிக்குடமும்....... மசிரும்......... நாளையிலிருந்து உன்னைப் புல்அரிக்கத்தான் கொண்டு போக வேணும் மூச்சுக் காட்டாமல் சொன்னதைச்செய்" முடிவாகச் சொல்லிவிட்டு நடந்தான்.

வெகுதொலைவில் மேட்டு வீதி வளைவுக்கப்பால் சிவப்பிரகாசம் ஐயா செல்வது இவனுடைய விழிகளுக்குத் தெரிகிறது. தகப்பன் இவ்வளவு வேகமாகச் செல்வதன் காரணமும் புரிந்தது, இனி, இன்று இருட்டும்வரை அவன் மாடாக உழைக்கப்போகிறான்.

கண்களை மீறிய நீரைத்துடைக்கமறந்து குந்திலே போய் அமர்ந்து கொண்டான்.

மாணிக்கப் பெரியையா கல்லுடைக்கும் சத்தம் இப்போது சீராகக் கேட்கிறது.



அங்கிருந்து பார்வையை நகர்த்திக் குசினிப் பக்கம் பார்த்தான் சொறி பிடித்த பெட்டை நாய் மட்டும் ஏதாவது கிடைக் கலாம் என்ற நப்பாசையில் உள்ளே பார்த்து வாலாட்டிக் கொண்டிருந்தது உள்ளே எந்த விதசலனமும் இல்லை.

எழுந்து குடிசையின் உக்கல் ஓலைகளின் நடுவே சொருகியிருந்த "சொப்பிங்" பையை எடுத்துக் கொண்டான்

கடிக்க எழுந்து பின்னேயிருந்து வந்த விசை இவனை நிமிரவைத்தது பூசைகள் எல்லாம் முடிவடைந்து முதலாவது சபை ஆரம்பமாகப்போகிறது என்பதற்கு அறிகுறியாக பருப்பும் குழம்பும் கமகம வென்று மணத்தன.

இவனுக்கு எச்சில் ஊறியது. கையிலிருந்து பெரிய "சொப்பிங்" பையை தயாராக எடுத்து வைத்துக் கொண்டான். இவனையொத்த நாலைந்து சிறுவர்கள் நுழை வாயிலைப் பார்த்து வாயைப் பிளந்தார்கள் இலை நிறைய வாங்கி இயன்றவரை சாப்பிட்டு விட்டு மிகுதியைப் பையிலே போட்டு வீட்டுக்குக் கொண்டுபோக வேண்டும் என்பதே இவனுடைய நோக்கமாக இருந்தது.

தேன்கூட்டில் ஈக்கள் சலசலப் பது போல மண்டபத்தினுள்ளே பலத்த ஆரவாரம் கிளம்பியது.

வாசலில் நின்றவர் இவர்களை நுழைய விடவில்லை. வரிசையில் ஏற்பட்ட நெருக்குதல் படிப்படியாகக் குறைந்து இறுதியில் நின்றுபோனது

மறுபடியும் சுவருடன் சாய்ந்து கொண்டான்.

முதலாவது சபை முடிந்ததும். சாப்பிட்டவர்கள் ஏப்பம் விட்டபடி கை கழுவப் போனார்கள் அவர்கள் சாப்பிட்ட எச்சில் இலைகளை அள்ளிவந்து எருக்கலைப் பற்றைக்கு அருகிலுள்ள பள்ளத்திலே கொட்டினார்கள்.

காத்திருந்த குட்டை நாய்கள் உள்ளே நுழைந்து துளாவின.

"கடவுளே! எவ்வளவு சோற்றை மிச்சம் விட்டிருக்கிறார்கள்!" இவன் பசித்த வயிற்றை மெல்லத் தடவிக் கொண்டான்.

இரண்டாவது சபையும் தொடங்கி விட்டது.

இவனுக்குத் தலையைச் சுற்றியது. நழுவிய காற்சட்டையை இழுத்துச் செருகிக் கொண்டான்.

தூணைப்போல வாசலில் நின்றவர் இப்போதும் இவர்களைக் கவனிக்கவில்லை மற்றவர்களை ஒவ்வொருவராக கூவியழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிளியண்ணை! வா இடமிருக்கு சரசக்கா நீயும் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு உள்ளுக்க வாக்கா.

அம்மான்! நீங்களும் வாங்கோ... பிறகேன் மசுந்திறியள்?"

"இல்லத்தம்பி நான் வீட்டிலை சாப்பிட்டிட்டன் இனி இடமில்லை "

அதுக்கொன்ன? இதிலையும் கொஞ்சம் சாப்பிட்டுப் பாருங்கோவன் பேந்து சிவப்பிரகாசம் கோவிப்பான் தெரியும் தானே? அந்தாள் மனிசியின்ர ஞாபகமா வைக்குது" அவர் மறுபேச்சின்றி வேட்டிச் செருகலைத் தளர்த்தியபடி உள்ளே நுழைந்தார்.இவன் சுவர்க் கட்டில் ஏறி யன்னலூடாக எட்டிப்பார்த்தான்.

உள்ளே உணவு பரிமாறுபவர்கள் சுறுசுறுப்பாக இயங்குவது தெரிந்தது சிவப்பிரகாசம் ஐயட்டு வேட்டியுடன் நெஞ்சை நிமிர்த்தியபடி அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார்.

அவரைக் கண்டதும் இவனுடைய பிடி நழுவியது. வரிசையிலிருந்து பெயர்ந்து வெளியே வந்தான் கூட நின்றவர்கள் புதினமாகப்பார்பபதை இவனுடைய முதுகு உணர்ந்தது. அதை அவன் பொருட்படுத்தவில்லை.

வீதியில் ஏறியவன், சற்றுத் தூரம் நடந்தபின் பற்றைகளினூடாகக் குதிக்கும் ஒற்றையடிப் பாதையில் கால் வைக்கும் போது திரும்பிப் பார்த்தான்.

மூன்றாவது சபைக்காக வெள்ளை வேட்டிகளும்,பட்டுச் சேலைகளும் உள்ளேநுழைவதும், வெளியே நின்றவர்கள் திரும்பவும் நெருக்குப்பட்டு அமைதியடைவதும் இவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

வெறும் வயிற்றோடு கிடக்கும் அம்மா. மடியிலே உறங்கிப் போன தங்கை.

தோட்டம் கொத்தப்போன தந்தை.

மூங்கில் தடியுடன் மிரட்டும் வாத்தியார்.

பசி மயக்கத்தில் இருளும் விழிகளில் எல்லோரும் மின்னி மறைகிறார்கள் கையிலிருந்த "சொப்பிங்"பையினுள் காற்றை ஊதி நிரப்பி மேலே எறிகிறான். கற்பார்களைத் தடவி வந்த வரண்ட புழுதிக்காற்றுடன்அது மெல்ல மெல்ல மேலெழுகிறது.

இவனுடைய கால்கள் மாணிக்கப் பெரியையாவை நோக்கி நகர்கின்றன.

# வெளிப்பு

கொல்லையில் குப்பை மேட்டில்
கொளுத்தியநெருப்பில் வெந்தும்
கோடையிலே கொடுவெயிலில்
கோடுகளாய் நிலம் வெடித்தும்
என் வீட்டு எல்லையிலே
நட்டுவைத்த கறிமுருங்கை
பட்டு விடும் என்று எண்ணி
பார்த்திருந்தேன்.

மாரி வரவில்லை
மழை இடையில் பெய்யவில்லை
ஓயாது உழைக்கின்ற
உழைப்பாளர்கரங்களைப் போல்
வேரை எங்கோ நீட்டி
விரிந்த நிலப்பரப்பில்
ஈரத்தைத் தேடி உயிர்ப்படைந்து
பச்சை இலை பரப்பி
பூமலர்ந்து பிஞ்சாகி
காய் காயாய் தொங்குவது
கண்டு களிப்படைந்தேன்

என் ஊரும் என் மண்ணும்
என் உற்றம் என் சுற்றம்
எமது மக்கள் எல்லோரும்
நீளும் நெடும் போரில்
பட்டழியும் பாடங்கள்
பதித்து மனத்திருத்தி
பொன்னுக்கும் பொருளுக்கும்
புகழுரைக்கும் விலைபோகா
உள்ளுரங்கள் பெற்று
நாளை உயிர்ப்புறுவர்

காய்ந்த சுடுமண்ணில்
காய்க்கின்ற கனி இனிக்கும்
கடும் உழைப்பில் சிவந்த நிலம்
பசுமை பூக்கும்
மண்ணுக்குள் நீரைப் போல்
மக்கள் மனங்களிலே
மறைந்திருக்கும் மானுடமும்
ஊற்றெடுக்கும்
எங்கும் பொது உரிமை
பூக்கின்ற புது வாழ்வு
மண்ணில் மலர
மீண்டும் வருமோர் வெளிப்பு

– தணிகையன்

*என்றுமே பக்தன் அல்ல*

என் விழிகள்
இறை சந்நிதியில்
அவன் அருள்
நினைந்துணர்ந்து
நீரை உகுத்த போது
பாவியென்றனர்

அருள் பெற்று
சந்நிதியில்
சிரித்தபொழுது
பைத்தியமென்றனர்

யாரும் அறியா வண்ணம்
எனக்குள்
தரிசித்த பொழுது
நாத்திக வாதியென்றனர்

-சாதனா-


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வசந்த காலக் கீதமதைப் பாடாதோ?

அழகான தேசத்தில் அனலொன்று எழுந்தது
அழிவுக்குள் வாடுகின்றோம்
நிழலாக எங்களை துன்பமே தொடர்ந்திட
நிலைமாறிக் கேடுகெட்டோம்
வளமான தேசத்தின் விடிவெல்லாம் தொலைந்திட
விடிவினைத் தேடுகின்றோம்
பழமான பைந்தமிட் பண்பினை இழந்து நாம்
பாரெங்கும் ஓடுகின்றோம்.

கலைகாண யாருள்ளார்? கவிபாட யார்நினைவார்?
கவலையால் ஏங்குகின்றோம்
நிலையான எம் பண்பு நீறாக எரிந்திட
நினைவற்றுத் தூங்குகின்றோம்
விலைபோன எம்தலையும் வீழ்கின்ற நாள்தேடி
விதியோடு போராடுறோம்
மலைபோல அரக்கரை மண்ணெங்கும் குவித்தெமை
மரணித்துக் கூத்தாடுறார்.

உரிமையினை யாம்கேட்டோம் உள்ளதனை இழந்திட்டு
உயிருக்காய் போராடுறோம்
சரிபாதி தாவென்றோம் சரிவரா தென்றுதுயர்ச்
சகதிக்குள் நீராட்டுறார்
எரிகின்ற எம்மண்ணில் எண்ணைதனை ஊற்றுறார்
எரிமலைக்குள் நீராடுறோம்
அரியவையரின் இரத்தத்தை உறுஞ்சியே குடித்தவரை
அணைத்தேயிவர் பாராட்டுறார்

கற்பக தருவாக அணிசெய்த விருட்சங்கள்
காப்பரணில் கிடக்கின்றது.
அற்பமாய் நாம்காத்த அருமை வளமெல்லாம்
அரக்கரால் உடைகின்றது.
சொற்பெருக்கிச் சோகமுடன் காவியங்கள் பாடியன்றிச்
சந்தோசம் கிடைக்கவில்லை
பொற்புடைய எம்மண்ணின் பொதுவான தர்மங்கள்
பொருந்தாது விடைகொள்ளுதே.

*நீர்வை கலைவரன்*



# யாருக்கான கல்வி? எதற்கான கல்வி?

*பேராசிரியர் சிவசேகரம்*

நம்முடைய கல்வி முறை பல மாற்றங்களைக் கண்டுள்ளது. நாம் அறிந்த இன்றைய கல்வி முறை அதாவது பாடசாலைக் கல்வி முறை ஆங்கிலேயர் மூலமாக நம்மை வந்தடைந்தது தான்,

கொலனியச் சூழலில் கொலனிய நிருவாகத் தேவைகளை முதன்மைப்படுத்தி உருவான கல்வி முறை கொலனியத் தின் கீழ் ஏற்பட்ட சமூக மாற்றங்களை உள்வாங்கியும் அதன் பின்பான மாற்றங்கட்கு அமையவும் மாற்றங்கட்கு உட்பட்டது. எனினும் கல்வி புகட்டும் முறை பாடசாலை வகுப்பறை சார்ந்தே பேசப்பட்டாலும் கடந்த இருபது இருபத்தைந்து வருட காலத்திற்குள் நமது பாடசாலைகள் கல்வி முறையில் ஏற்பட்டுள்ள சீரழிவு காரணமாக கல்வி முறையில் சீர்திருத்தத்தைப் புகுத்தினாலும் அது எதிர் மாறான விளைவுகளையே ஏற்படுத்தும் எனும் நிலைக்கு நாம் வந்துள்ளோம்..

கடந்த ஐம்பது வருட காலத்திற் கல்வி முறையில் ஏற்பட்ட சில சாதகமான அம்சங்களைக் கவனிப்பில் எடுக்காமல் இன்றைய கல்வி முறையை மதிப்பிடுவது நியாய மாகாது.

எல்லோருக்கும் இலவசக் கல்வி என்ற கொள்கையும் பட்டப் படிப்பு வரை அதன் நீடிப்பும் கல்வி வாய்ப்புக்களைப் பரவலாக்கியது. கட்டாயக் கல்வியும் அதனோடு சேர்ந்து நடைமுறைப் படுத்தப் பட்டதால் தோட்ட முதலாளிகளது வர்க்க நலன் சார்ந்து வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்ட மலையகமும் சிலபின் தங்கிய கிராமப் பிரதேசங்களும் போக அடிப்படையான கல்வி பெருவாரி மாணவர்கட்கு எட்டியது எனலாம்.

எழுதவும் வாசிக்கவுமான அறிவை மட்டுமே அடிப்படையாகக் கொண்டால் நம் கல்வி முறை ஆசியாவில் வெற்றிகரமான ஒன்றாகவே கொள்ளலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் தரத்தைப் பொறுத்தவரைதாய் மொழிக் கல்வி நடைமுறைப்படுத்தப் படும் வரை உயர் கல்விக்குமான வாய்ப்பு நகரம் சார்ந்து ஓரளவு வசதி படைத்தும் இருந்தவர்கட்கே எட்டியது எனலாம்.

எனவே இலவசக் கல்வியுடன் தாய் மொழிக்கல்வி இணைந்த பின்பே பரந்து பட்ட அளவில் தரமான கல்வி நாட்டின்பல பாகங்களையும் எட்டியது என்பது தெளிவு. அதே வேளை நாட்டில் குறிப்பாக கிராமியச் சூழலில் இருந்து வந்த நிலவுடமைச் சமூக உறவுகள் சமூக அடிப்படையிலும் பிற்பட்ட மக்கள் பிரிவுகள் முழுமையான கல்வி வாய்ப்புக் களை பெற முடியாது தடுத்தன.

1956ல் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் அதற்கு ஏதுவாக இருந்த சமுதாய விழிப்புணர்வும் இடது சாரிச் சிந்தனைகளது விழிப்புணர்ச் சியுமே பிற்படுத்தப்பட்ட நிலையில் இருந்த மக்களது கல்வி உயர் கல்வி, உயர் உத்தியோகங் களுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத் தின. எனினும் ஏற்றத் தாழவுகள் தொடர்ந்தும் இருந்தன.

நகரங்கட்கும் கிராமங்கட்கும் இருந்து வந்துள்ள பொருளாதார இடைவெளியும் உடலுழைப்புக் கும் அலுவலகவேலைகட்கும் இடையில் இருந்த சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வும் நமது கல்வி முறையின் சமனற்ற வளர்ச்சியை ஊக்கு வித்தன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியின்மையின் நடுவே கல்வி பெற்றோர் தொகையின் வேகமான வளர்ச்சி படித்தோரின் வேலை யின்மையும் தொழில் (குறிப்பாக மருத்துவம், எந்திரவியல் சார்ந்த கல்விக்கான பெரும் வேண்டு தலை உருவாக்கியது. இதன் பின்னணி யிலேயே 1970 — 71ல் முன் வைக்கப்பட்ட தரப்படுத்தல் முறை யையும் இன்றைய ற்யூட்டறிகளின் தோற்றத்தையும் பாடசாலை களை புறமொதுக்குமளவான வளர்ச்சியையும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

1977ல் யு. என். பி அதிகாரம் வந்த பின்பு தனியார் மயமாக்கல் பொருளாதாரத் துறை யில் நேரடியாகவே புகுந்தது, கல்வித்துறையில் அது மறை முகமாகவே ஊக்கு விக்கப்பட்டது பல்கலைக் கழக மட்டத்தில் தனியார் மருத்துவக் கல்லூரி தோற்று விக்கப்பட்டு பிற மாணவர்களும் ஆசிரியர்களும் பல வேறு தொழிற்றுறைகளில் இருந்த வர்களும் எதிர்த்தும் ஒத்துழைக்க மறுத்ததும் காரணமாக முடிவுக்கு வந்தது.

அதே வேளை நாட்டில் காளான்கள் போல பெருகியுள்ள "சர்வதேசப் பாடசாலைகள்" எனப் படும் தனி யார் பாடசாலைகள் வசதி படைத்தவர்கட்கும் ஊழல் மிக்க ஆட்சிகளின் கீழ் உருவான புதிய பணக்காரர்கட்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பி வைக்க வசதியான அமைப்புக்களாயின.



இத்தகைய பாடசாலைகள் எல்லாவற்றிலும் ஏற்கக்கூடிய கல்வித்தரம் இல்லா விடினும் நமது கல்வியின் சீரழிவால் சர்வதேசப் பாடசாலைகள் வரு மானம் மிக்க தனியார் துறைச் சமூக நிறுவனங்களில் என்ஜி. ஓக்களுக்கு நிகராக நிற்கின்றன.

மொழிக்கல்வி பற்றிய அக்கறை குறைந்து விட்டது மருத்துவம் தொழில்நுட்பம் வணிக வியல் நிருவாகம் போன்ற பல துறைகளில் ஆங்கிலத்தின் ஆதிக் கத்துக்குப் பூரண அரசஅங்கீகாரம் கிடைத்துள்ளது.

> சமூக ஈடுபாடுகளும் சமூக நீதிக்கான வேட்கையும் அநீதிகட்கெதிரான கோபஉணர்வும், விமர்சன மனோபாவமும், சமூக மாற்றத்திற்கான செயலூக் கமும், வெகுசனச் சார்பான நடைமுறையும் மாணவப் பருவத்திலேயே பயிராக்கப்பட வேண்டும்.

இவற்றைவிட அயல்நாட்டு பல்கலைக்கழகங்களுடன் கூட்டு முயற்சியாக இங்கு தனியார் பல்கலைக்கழகங்கள் முளை விடத்தொடங்கியுள்ளன.

சிங்களமொழிப் பற்றும், பௌத்த மத விழுமியங்களும் பற்றிப் பேசுகின்ற பெரும் பான்மை இன மேற்தட்டுமாந்தர் தங்கள் குழந்தைகளை தனியார் பாட சாலைகளில் ஆங்கில வாயிலான கல்விக்கும் தொடர்ந்து மேற்படிப் புக்கு வெளிநாட்டுக்கும் அனுப்பி வருகின்றனர்.

புதிதாக உருவாகும் அயல் ஒத்துழைப்புப் பல்கலைக் கழகங்கள் மூலம் அவற்றில் சிலருக்கு அதே விதமான வசதி குறைந்த செலவிற் கிட்டுகிறது இன்று தாய் மொழி மூலம் உயர் கல்வி என்பது ஒரு சடங்காகவும் ஒரு சில்ர் சிறிது காசு சம்பாதிக்கும் ஒரு வழியாகவும் முடங்கி விட்டது. ஏனெனில் தொழில் நுட்பத் துறைப்பட்ட தாரிகளில் கணிச மானோர் வெளிநாட்டு வேலை களை நாடுகிறார்கள்.

நமது நாட்டின் தொழில் விரித்தி குறைவதனால் வெளியார் கம்பனிகளுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ சேர்ந்து வேலை செய்யவேண்டி இருந்தது. உள் நாட்டு உற்பத்தி தேய்கிற அதே வேளை நவீனமய மாதல் உலக மயமாதல் திறந்த பொருளாதாரம் என்கிற பேர்களில் வெளிநாட்டு ஆதிக்கம் மேலும் வலுப் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது கல்வி முறை இந்தச் சீரழிவுக்கு எவ்வாறு முகங்கொடுக்கப்போகிறது என்பது நம் முன்னுள்ள முக்கியமான கேள்வி. இன்று நமக்கு முன் வைக்கப்படுகிற புதிய கல்வித்திட்ட ஆலோசனைகளில் பயனுள்ள கருத்துக்கள் சில உள்ளன.

ஏட்டுப்படிப்பைவிட நடைமுறை சார்ந்த விடயங்களுக்கு அழுத்தம் தரவேண்டும் என்பது அவற்றுள் முக்கியமானது ஆயினும் அதை நடை முறைப்படுத்துவதற்கான வசதியோ வளங்களோ அனேகமாக உண்மையான நோக்கமோ அரசாங்கத்திடம் இல்லை.

அதை நடைமுறைப் படுத்தப்பாடசாலை ஆசிரியர்களை மீள் பயிற்சிக்கு உட்படுத்துகிற தேவை பெரிது மேலும் பாடசாலைக் கல்வி முறையின் தொடர்ச்சியான உயர் கல்விதொழில் பயிற்சிகட்கான திட்டங்கள் என்ன அவை எவ்வாறு?

கட்டுப்பாடுகட்கு அமையவே நமது கல்விக் கொள்கை திசை திருப்பப் படுகிறது என்பது கவனிக்க உகந்தது. இன்று தகவல்யுகம் பற்றியும் கணனி முறை பற்றியும் நிறையப் பேசப்படுகிறது,

கணனிக் கல்வி மூலம் வாழ்வில் முன்னேறலாம் என்று பலர் நம்ப வைக்கப்பட்டுள்ளனர்.

கண்னிகளின் பயன் பற்றியோ அவற்றின் அவசியம் பற்றியோ நவீன தகவல் வழங்கல் பரிமாறல் வசதிகளின் வலிமை பற்றியோ மாற்றுக்கருத்து ஏதும் இல்லாமலே நமது நாட்டில் விருத்தி செய்யப்பட்டுவருகிற கணனி அறிவு நமது நாட்டின் சுயசார்புக்கோ பொருளாதார மேம் பாட்டுக்கோ தொழில் வளர்ச் சிக்கோ உற்பத்திப் பெருக்கத் துக்கோ உதவாது என்று தைரியமாக கூறமுடியும்.

**சமூக உணர்வற்ற கல்விமான்களும் தொழில் வல்லுனர்களும் இயந்திரங்களை விடக் கீழானவர்கள்**

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களுடன் பொருந்துகின்றன என்பன பற்றிப் போதிய கவனம் எதுவும் இல்லாமலே கல்விச் சீர்திருத்தம் இன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

அதிலும் முக்கியமாகசர்வதேச நிதி நிறுவனங்கள் இலவசக் கல்விச் செலவு பற்றி விதிக்கும்

கொலனியயுகத்தின் கல்வியைப் போல கொம்பியூட்டர் யுகத்தின் கல்வியும் இந்த நாட்டின் கல்வியின் பயன் இன்னொரு நாட்டின் கொள்ளைச் சுரண்டற்காரர் களுடைய தேவைகள் சார்ந்தே அமைகிற அபாயம் மிகவும் நிசமானது. இந்தப் பின்னணியில்



வைத்து நாம் நமது கல்வி முறையையும் அதன் எதிர் காலத்தையும் பற்றிச் சிந்திப்பது அவசியம். நமது கல்வி வணிக மயமாகிவிட்டது. பரீட்சைப் பெறுபேறுகளே கல்வித் தொழிற்சாலைகளின் உற்பத்திப் பண்டங்களாகி விட்டன.

இக்கல்வி மாணவர்களது தனிப்பட்ட மேம்பாட்டுக்கோ சமூக மேம்பாட்டுக்கோ போதியது மல்ல உகந்ததுமல்ல இன்றைய பாடசாலைகள் இரண்டு தசாப் தங்கட்கும் முந்திய சமுதாயத் தன்மையுடைய அமைப்புக்களாக இல்லை. சமூக மேம்பாட்டுக்கும் சமூக உணர்வுக்கும் நிறுவனம் என்ற அடிப்படையிலோ அவை ஆற்றும் பங்கு மிகவும் குறுகி விட்டது. பல்கலைக்கழகக் கல்வியும் அதே விதமாகச் சீர் குலைந்து வருகிறது.

இன்று நமது கல்வி முறை நயமாக நமது நாட்டினதோ அதன் மக்களினதோ நலன்களை முதன்மைப்படுத்துகின்ற ஒன்றல்ல. அதுஒரு நவ கொலனியயுகத்தின் ஏகாதிபத்தியத்தின் எசமானர்களது கட்டளைகட்கமைய இயங்கக் கூலிப சிற்றூழியர்களை உற்பத்தி செயயும் ஒரு கருவியாக மாறி வருகிறது.

இதிலிருந்து நாம் விடுதலை பெறுவது எவ்வாறு என்பதே நம்முன்னுள்ள சவால் எல்லாவற்றையும் கேள்விக்குட் படுத்தவும் எதையும் ஆராய்ந்து அறியவும் எந்த நிபுணத்துவத்தையும்எதிர்த்து வாதாடவும் ஆற்றலும் உறுதியும் கொண்ட ஒரு இளம் பரம்பரை உருவாக நாம் என்னசெய்யமுடியும்? நமது கல்வி நிறுவன அமைப்புக்களின் வரையறைகட்குள் இது இயலுமானதாக தெரியவில்லை. சமூக ஈடுபாடும் சமூக நீதிக்கான வேட்கையும் அநீதிகட்கெதிரான கோப உணர்வும் விமர்சன மனோபாவமும் சமூக மாற்றத்திற்கான செயலூக்கமும் வெகுசனச் சார்பான நடைமுறையும் மாணவப் பருவத்திலே பயிராக்கப்பட வேண்டும். சமூக உணர்வற்ற கல்விமான்களும் தொழில் வல்லுனர்வுகளும் இயந்திரங்களைவிடக் கீழானவர்கள். கல்வித்துறையில் உள்ளவர்கள் இது பற்றிக் கவனமாகச் சிந்தித்து நமது நாட்டின் எதிர் காலத்திற்க்கு ஒளியூட்டும் புதிய தலைமுறையை உருவாக்குவது பற்றிச் சிந்திக்கவேண்டும் நல்ல செயற்பாடுகள் வகுப்பறைகட்கு உள்ளும் வெளியும் நிகழ்த்தப்பட வேண்டும். ✡

***ஒரு அவநம்பிக்கை வாதி***

மேகத்திரளின் கருநிறப் பகுதியையே பார்க்கிறான், ஒரு தத்துவ ஞானி கருப்பு வெண்மைப்பகுதிகளைப் பார்த்து வியப்படைகிறான். ஆனால் வாழ்க்கையில் நம்பிக்கையுள்ளவனோ மேகத் திரளைப் பார்த்துக்கொண்டிருப்பதில்லை அதன்மீது நடக்க ஆரம்பித்து விடுகிறான்

*-எலின்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சமூகம்

– சூரியநிலா –

எங்கள்
வாழ்க்கை ஓடையின்
வெள்ளம்
இளையதலைமுறையின்
இரத்தமாக ஓடிக்கொண்டிருக்கிறது!

இழந்த உரிமைகளைப்
பெறுவதற்காய்
இழந்து கொண்டிருக்கும்
எங்கள் தேசத்துச் செல்வங்கள்
ஏராளம்!

முட்கம்பி வேலிகளுள்
முடங்கிப் போய்க்கிடக்கும்
தமிழ்க் கிராமங்கள் பாடும்
முகாரி ராகங்கள்
முடிந்து போன உதயத்தையல்லவா
உணர்த்தி நிற்கின்றது!

பற்றுச் சீட்டுடன்
படியீட்டு நிறுத்துக் கொடுக்கும்
கடைச் சரக்குகளாய்
எங்கள் இளசுகளின் நிலை
இழிந்து போகின்றது!

பத்திரிகைகளில்
படிப்பதற்காகவே
ஒரு பக்கம்
“காணாமற் போனோர்”
என அச்சடிக்கப் படுகின்றது!

முகவரிகள் தொலைந்து
மூலைக்கொரு முடமாய்
எம்முறவுகள்
எறியப்பட்டுக் கிடக்கின்றது!

காடைத்தனமும்
கற்பழிப்புக்களும்
வாடையடிக்கும் வாழ்வாய்
எங்கள் சுற்றம்
மாற்றப்பட்டிருக்கிறது!

இனவாதச் சுவருக்கு
இரத்த வெறிச் சாந்திட்டு
இறுகக் கட்டியெழுப்பி
“சமாதானம் செய்வோம்”
எனப் பொய்ச் சத்தியம் முழங்கும்
வெள்ளையடிக்கப்பட்ட
கல்லறைகள்!

உணர்வுகளை
அடக்குவதற்காக
உடனுக்குடன் பிறப்பிக்
கப்படும்தடைச் சட்டங்கள்!
எல்லாம்
சமூக வெளிகளில்
சஞ்சரித்து எம்மை
சங்காரம் செய்து
கொண்டிருக்கின்றன
அத்தியாவசியப் பண்டங்களைக்கூட
அடையமுடியாது
அகதிகளாக அலையும்
ஆதரவற்ற தமிழர்

அடையாள அட்டைகளை
அசதியின்றித் தூக்கிச் செல்லும்
இளசுகளும் பழசுகளும் ......
இவ்வாறு
முட்கம்பிகளால் சுற்றப்பட்ட
முண்டமாக
எம் சமூகம்
குற்றுண்டு குனிந்து
மெலிந்து மெதுவாய்
மௌனமாய்ச் செத்துப் போகின்றது.



# அரங்கேற்றம்

“மகனுக்கு அறிவிச்சாச்சோ”

அங்கு வந்திருந்த ஒரு சிலரில் ஒருவர் வல்லிபுரத்தின் துரத்து உறவினரான மயில் வாகனத்திடம் கேட்டனர்.

“செஞ்சிலுவைச் சங்கம் மூலம் சொல்லப்போனவை. வீட்டிலை ஒருத்தரும் இல்லையாம் ரெலிபோன் றிங் பண்ணுதாம் ஒருத்தரும்எடுக்கினம் இல்லையாம்”

“அறிவிச்சுத்தான் என்ன ஓடிவந்து குதிக்கப் போறானே. சும்மா விட்டிட்டு நடக்கிற காரியங்களை பாருங்கோ.”

இது அருகில் இருந்த சொந்தக்காரர் ஒருவரின் கோப வார்த்தை.

“சயிக்கிள் மெக்கானிக் சரவணன்ரை தேப்பனும் இராத்திரிச் செத்துப் போனாராம். அவங்கடை செத்தவீட்டுக்கும் சனம்போகும். செய்யிற காரியங்களை நேரகாலத்தோட செய்து முடிக்க வேணும் - ஆளணி இல்லாமல் பிறகு அவலப்படக் கூடாது”

அவசரப்படுத்தினார் உறவினருள் ஒருவர் வல்லிபுரத் தாரை வெள்ளைச் சேலை விரித்து வாங்கில வளர்த்தப்பட்டிருந்தது.

வெள்ளத்துணியால் மூடி முகம்மட்டும் வெளியே தெரிந்தது. அதில் மொய்க்கமுனையும் இலையான்களை கையிலிருந்த வேப்பிலையால் இடையிடையே கலைத்தபடி அவரது மனைவி செல்லம்மா. இரவிலிருந்து பலமுறை கத்தி அழுதகளைப்பால் சோர்ந்தபடி இருந்த அவள் மீண்டும் வாய்விட்டு அழுதாள்.

*யாதவன்*

“அவள் ஒரு குறையும் இல்லாமல்தான் இருந்தவர்.. மகனை பாக்கேல்லை எண்டகுறைதான். அதைமட்டும் எங்களாலை நிறைவேற்றி வைக்க முடியேல்லை. அது நிறைவேறி இருந்தா அவற்றை உயிர் நிம்மதியா பிரிஞ்சிருக்கும் - கடசியாயும் செல்லம்மா-சண்டுகம் வந்துட்டானே சண்முகம் வந்துட்டானே எண்டபடிதான்-அவற்றை சீவன் போனது”

அவனது கண்கள் குளமாகி– ஓவென்று அடைத்தகுரலில் கதறி மீண்டும் அழுதாள்.

“அவர் போயிட்டார் - நான் அவரை நல்லாத்தான் பாத்தனான்.... என்னை இனி ஆர் பாக்கப் போகினம்– எனக்கு தண்ணி மென்னி ஆர் தரப்போகினம்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செல்லம்மாக்கா..... கொஞ்சம் ஆறிஇருங்கோ...அப்பிடி உங்களைப் பார்க்க ஆக்கள் இல்லையே"

பக்கத்தில் அமர்ந்திருந்த உறவுக்காறி அவளைத் தேற்றினாள்.

வல்லிபுரம் அந்தக் கிராமத்தின் ஓய்வுபெற்ற கிராம சேவகர்.ஓய்வு பெறுவதற்கு முன்னர் அந்தக் கிரா மத்தில் மட்டுமல்ல அயலூர்களிலும் அவருக்கு செல்வாக்கு இருந்தது. மகன் சண்முகநாதன் அவுஸ்திரேலியாவில் இருதயநோய் சத்திர சிகிச்சை நிபுணராக இருக்கிறான். எண்பத்திமூன்று இனக்கலவரத்துக்குப் பின்னர் இங்கு வைத்திருப்பது பயமென்று வல்லிபுரமும் செல்லம்மாவும் தான் முனைப்பாக நின்று அவனை அனுப்பிவைத்தனர்.

அவன் காதல்கீதல் என்று எவற்றிலும் ஈடுபாடு காட்டாததால் வல்லிபுரமே தமது வசதிக்கும் தகுதிக்கும் ஏற்ற ஒரு பெண்ணைத் தேர்ந்து கொழும்புவரை கொண்டு சென்று அனுப்பிவைத்தார். ஒரே ஒரு பிள்ளையின் கல்யாணத்தில் பங்குகொள்ள இயலாமை அவருக்கு ஆழமான மனக்கவலையைத் தந்திருந்தாலும் வீடியோ கொப்பியில் கல்யாண நிகழ்ச்சிகளைக் கண்டு ஓரளவு தன்னை தேற்றிக் கொண்டார்.

மகளின் மூன்றாவது பிறந்த நாளை தாய், தகப்பனுடன் கொண்டாட வேண்டும் என்பதற்காக அவுஸ்திரேலியாவில் இருந்து ஒரு முறை வந்து போனவன் அதன் பின்னர்- இங்கு வந்து போகும் சிரமங்களை கருதி மீண்டும் வர வில்லை.

மகள் காயத்திரி அவுஸ்திரேலிய நாட்டு சூழல் கலாச் சாரத்துடன் இணைந்து ஒரு கூட்டுக்கலாச்சாரத்துக்கு பழக்கப் பட்டுவிட்டாள் மகளின் எதிர் காலத்தை கருத்திற் கொண்டாவது அங்கு கால்லூன்ற வேண்டிய நிலையும் தோன்றிவிட்டது.

வல்லிபுரத்தாரும் மகள் சண்முகம் தங்களைப் பார்ப்பதற்காக இங்குவந்து நாட்டுப்பிரச்சனையால் போக்குவரத்து இடைஞ்சலுக்குள் சிக்கிச் சிரமப் படுவதை ஆரம்பத்தில் விரும்பவில்லை ஒரு சிலர் இச் சிரமங்களுக்கு மத்தியிலும் வந்து போவதை அறிந்த பின்னர் கடந்த மூன்று மாதகாலமாக-மகனையும் மனைவி பேரப்பிள்ளையையும் பார்க்கவேண்டும் என்ற ஆவல் அவரிடம் எழுந்தது.

"நான் செத்தாலும் உன்னை ஒருக்கா பார்த்துவிட்டு சாகவேணும் போலை இருக்குஒருக்கா சிரமத்தைப் பாராமை வந்திட்டுப் போ"

அவள் சாகப்போவதை உணர்ந்துதான் சொன்னாரோ இறுதியாக தொலைபேசியில் அவர் பேசிய வார்த்தை இது.



"அப்பா அடுத்த மாதம் காயத்திரியின்ரை பரதநாட்டிய அரங்கேற்றம் - பெரிய ஹோல் எடுத்து வடிவாச் செய்யப்போறம் எத்தனையோ பெரிய பெரிய ஆக்கள் எல்லாம் வர இருக்கினம் அந்த வேலையாத்தான் இப்ப ஓடித்திரியிறன்- இந்த வயசைவிட்டா பேந்து அவளும் பரதநாட்டியத்தை விரும்பமாட்டாள் இது நடத்திறத்திலை உங்களுக்கு எங்களுக்கு எல்லாம் பெருமைதானே இதை முடிச்சுக் கொண்டு நான் உங்களைப் பார்க்க வாறன்"

மகன் சண்முகநாதனின் பதில் வல்லிபுரத்துக்கு உள்ளூரப் பெருமையாக இருந்தாலும் ஆழ் மனதில் அவனது வருகைக்கான ஏக்கம் உடல் வருத்தத்துடன் மனவருத்தத்தையும் அதிகரித்தது. கடைசியாக ஒருமுறையாவது மகனைக் காண மாட்டேனா" என்ற ஏக்கம் அவரது உயிர் பிரியும்வரை இருந்தது.

வல்லிபுரம் விதானையாரின் சாவீடு எளிமையாக நடந்து கொண்டிருந்தது. பெரிதாசனக்கூட்டம் இல்லை. சொந்தக்காரர் பதினைந்து பேர்வரை விரும்பியோ விரும்பாமலோ அவரது இறுதிக் கிரியைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

சயிக்கிள் கடை சரவணன் படிக்காதவன்தான் இருந்தும் அந்த ஊரில் அவனுக்கு என்று ஒரு தனி மரியாதை இருந்தது. நகருக்குச் செல்லும் தெருச்சந்தியில் முகப்புக் கடை அவனுடையது கிரா மத்தை விட்டு வெளியேறும் ஒவ் வொருவரும் அவனது முகத்தைப் பார்த்து புன்சிரிப்போடு கூடிய தலையசைப்புடன் தான் செல்வர். இரவு பகல் எப்பொழுது என்றாலும் சயிக்கிளில் ஒரு பிழை என்றால் கடை பூட்டியிருந்தாலும் வீட்டில் வைத்தும் திருத்திக் கொடுப்பான். அவனிடம் செல்லும் எல்லோரையும் வரவேற்று அவர்களது நலன்களை விசாரித்த படியே வேலைகளைச் செய்வான். நியாயமான கூலியையே பெற்றுக் கொள்வான்." "சைக்கிள் திருத்துவதில் சண்முகம் கைராசிக் காரன்" சண்முகத்தின்ர கைபட்டால் சைக்கிள் இரதம் மாதிரி ஓடும் என்பது ஊரவர்களின் அபிப்பிராயம். வெளியூர்களிலும் இந்த அபிப்பிராயம் பரவி அங்கிருந்தும் அவனுக்கு வேலைகள் வரும். அத்துடன் ஊரில் நடக்கின்ற நன்மை தீமைகள் அனைத்தையும் முன்னின்று நடத்தும் ஒரு சிலருள் அவனும் ஒருவனாக இருந்தான்.

இறுதிக் கிரிகைகள் முடிந்து சடலங்கள் இரண்டும் மயானத்துக்கு வருகின்றன. வல்லிபுரம் விதானையாரின் சடலம் பிரேதவானில் பத்துப் பன்னிரண்டு பேருடன் வந்து சேர்கிறது. பின்னால் சிறிது தூரத்தில் மலர்தண்டிகை-பாடையில் சரவணனின் தந்தையாரின் சடலம் ஊரே திரண்டு வருவது போல் ஊர்வலமாக வருகிறது.

இரு சடலங்களும் சிதையில் வைக்கப்பட்டு தகனம் செய்வதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன சரவணனுக்காக வந்தவர்கள் அவனது தந்தையாரின் சடலம் வைக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதையை சுற்றிக் காணப்படுகின்றனர். தாங்கள் வந்ததை சரவணன் பார்த்து விட வேண்டும் என்பது மட்டுமல்ல தாங்கள் இறுதிவரை நின்று உதவி புரிந்தவர்கள் என்பதற்காகவும் எதையாவது செய்வதிலும் அபிப்பிராயம் சொல்வதிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

சிறிதுதூர இடைவெளியில் வல்லிபுரம் விதானையாரின் சடலம் வைக்கப்பட்டிருந்த சிதையை உறவினர் ஒருவர் கொள்ளிக் குடம் சுமந்தபடி சுற்றிக் கொண்டிருந்தார்.

உறவினர்கள் சிலரும் சடலத்தை எரிப்பதற்கு வந்த கூலிக்காரர்களும் அங்கு கூடி நிற்கின்றனர் சரவணனின் தந்தையாரின் பிரேத ஊர்வலத்தில் வந்தசிலரும் அவர்களுடன் இணைந்து கொள்கின்றனர்.

வெய்யிலுக்காக சுடலை ஆலமர நிழலில் கூடி நின்றவர்களில் ஒருவர் மடித்து வைத்திருந்த வாரப்பத்திரிகை ஒன்றை விரித்து. அருகில் நின்றவருக்கு காட்ட அங்கு ஒரு கூட்டமே கூடிநின்று அதை எட்டிப்பார்க்கிறது.

அப்பத்திரிகையின் ஒருபக்க மூலையில் பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் சண்முகநாதன் தவமலர் தம்பதிகளின் புதல்வி காயத்திரியின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று மாலை ஐந்து மணிக்கு அவுஸ்திரேலியாவில் சிட்னி நகரிலுள்ள எண்டர்சன் மண்டபத்தில் நடை பெறும் என்ற விளம்பரம்- வல்லிபுரத்தாரின் பேத்தியின் அழகான பரதநாட்டிய அபிநயத்தோற்றம் கலர்ப்படத்தில் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது.

## அடக்கமும் ஆற்றலும்

தாதாசாஹிப் பால்கோவிருது (1997) பெற்ற பொழுது அளித்த ஆங்கில மொழியில் இடம்பெற்ற பேட்டியில்.சிவாஜி கணேசன் கூறியது....

பொதுவாகச் சொல்வதானால் நான் வர்த்தக ரீதியான நடிகன் தான் இவ்வளவு தூரம் நான் வளர்ச்சியடைந்ததுக்கு தமிழ் நாட்டில் உள்ள பெரியவர்களது உதவியும் ஆசியும் தான் காரணம், அத்துடன் தமிழ் நாட்டு ரசிகப் பெருமக்களுடைய அன்பும் ஆதரவும் எனக்கு இருந்தது.

# நம்பிக்கை

*கு. றஜீபன்*

நம்பிக்கை!
நரம்புகளில் அறையப்பட்ட
நாகரிகம்

மனிதவேர்களுக்கு
விருந்தாகும்
சிந்தனை ஊற்று.

மனிதன்
சிந்தனைச் சிப்பிக்குள்
நம்பிக்கைமுத்து.

மனிதம்!
இன்னமும்
எழுதமுடியாத
காவியம்.

மனிதசிருஷ்டியில்
நம்பிக்கையின்
கட்டுமானம்
நல்லதை ஏற்றியது.

வழுக்கிய
தரைமீதும்
வாசனை கொள்வது
நம்பிக்கை.

உயிரின் உன்னதத்தில்
நம்பிக்கை
திரியாகியது.
கண்ணீர் கண்டு
கல்லறைதேட
பன்னீர்ப் பூக்கள்
மட்டும் உலகா?

பகலும் இரவும்
பொருந்திஅமைந்த
ஒருநாள் பொழுது
ஒன்றும்

உணர்த்தலையா?
திருநாள்
என்றும் தித்திக்காது.

மணலைவாரி
கண்ணில் இறைக்கும்
மனதை உடைத்தால்
மரணம் கிட்டும்
அன்றி.

வெம்மைகண்டு
கொடுமைதங்கி
சிந்தைதெளிந்து
சினத்தை அடக்கி
நெஞ்சைநிமிர்த்தி
நேரேநடந்தால்
நஞ்சு விலகி
நல்லது பிறக்கும்.

மனிதா!
மழை பெய்தால் மட்டும்
மகுடம் ஏறாது

நீ!
இன்பத்தை மட்டும்
துய்ப்பதற்கு
இது ஒன்றும்
சுந்தர லோகமல்ல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத்தை மட்டும்
துய்ப்பதற்கு
இது ஒன்றும்
சுந்தர லோகமல்ல

நெல்லை
வயலில்தான்
விதைக்க வேண்டும்
விதைத்துவிட்டு
வீட்டில்இருந்தால்
கதிர்வராது.

சேற்றில்
இறங்கினால் தான்
களைபிடுங்கலாம்.

சேறுபூசிய
தேகமென்று
சினக்காதே!
பாசி படிந்த
உள்ளத்தைவிட
அது மேல்

சிந்தியவியர்வைக்கே
சில்லறை கிடைக்கும்

உலகம்!
நம்பிக்கையில்
நகர்கிறது.
அடே!
முட்டாள் மனிதர்களே!

மூலையில் குந்தி
அழுதிருந்தால்
வாழ்க்கையில்
சாரல் சிந்துமா?

இலையுதிர்காலம் கண்டா
இடியேறு கேட்ட
அரவமாய் இருப்பது.

மனிதா!

நீ
தூங்கியது போதும்
அழுதவிழிகளை
அலசு!

வசந்தம்தேடி
காத்திருந்தது போதும்
உன்வாயிலுக்கு
அதை இழுத்துவா!

ஏ! மனிதர்களே!
நேற்றைகளுக்காய்
இன்றைக் கரைத்து
நாளைகளையல்லவா

நித்தம்
தொலைக்கிறீர்கள்
நம்பிக்கைஇல்லா
மனிதன்
நரகத்தில் வீழ்ந்த
குருடன்

பேதை மனிதர்களே!
பேசும் மனிதர்களே!
அழுதவார்த்தைக்கு
அழகேது.!

கண்ணீர்
முகத்தை நனைப்பதனால்



காயம்
ஆறிப்போகுமா?

கடலில்
வீழ்ந்து அழுதால்
கரைஏறமுடியுமா?

கொண்டு போகும்
புயலைக்கண்டு
அஞ்சி அழுது
புரண்டால்

கொண்டுவரும்
தென்றலை
உணரமுடியாது

மனிதா!
நம்பிக்கை கொள்

வித்தின்
நம்பிக்கைதானே
விருட்சமாகிறது

முத்தினை சுழியோடி
பெற்றதனால்தான்
முத்துக்குப் பெருமை

காயத்தைக்கண்டு
கண்ணீர் விட்டால்
காலத்தை உன்னால்
நேசிக்க முடியாது

நல்லதைத்தேடும்
மனிதனே!


கெட்டதைக்கண்டு
கீழ்ப்படியாதே
வெட்டெனமற!

பட்டைதீட்டிய
வைரம்போல்
துன்பம் தீண்டிய
உள்ளம்வெல்லும்
உலகைநாளும்

தோல்விகண்டு
துவளாதே!
வாழ்வு இருக்கு
இன்னும்

இன்றே
தோல்விகள் தூங்குவதற்காய்
தாலாட்டுப்பாடு
எங்கே!

நம்பிக்கைக்கீதம்
நயமாகக் கேட்கட்டும்
நிச்சயம்
நாளையவிடியல்
உனக்காக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைபடவேண்டிய மௌனப் (பொருளாதாரப்) பண்பாடு

வே.சேந்தன்

தொண்ணூறுகளில் "உலகமய மாதல்" பற்றிய சிந்தனை புத்திஜீவி களிடம் மட்டும் இருந்தது. இன்று பொதுமக்களுக்கு அதுபரவலாக் கப்பட்டு வரும் இவ்வேளையில், உலகமயமாதல் தொடர்பான விளைவுகளின் கருசனை மேலைத் தேச மக்களிடம் எழுப்பியிருக்கும் பரவலான விழிப்புணர்வு மற்றும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் இதனை மூன்றாம் மண்டல நாடுகளின் நோக்கு நிலையில் இருந்தும் பார்க்கப்பட வேண்டியுள்ளது.

1960களில் "உலகமயமாதல்" பற்றிய சிந்தனை "உலகமயப் படுத்தல்" என்னும் வடிவில் வெளி வரத் தொடங்கியபோதும் அன்று இருந்த இரு துருவ சர்வதேசிய அரசியல் உலகமயப்படுத்தலுக்கு துரித கதியைக் கொடுக்க முடிய வில்லை.

1990களில் சோவியத் கட்டமைப்பின் வீழ்ச்சியுடன் புதிய ஒழுங்கு சர்வதேச பொருளாதார அரசியலாக- மூலதனத்திரட்சிக்கான அரசியலாக- அமெரிக்கா தலைமை யிலான புதிய சர்வதேசிய அரசியல் அரங்கு மாற்றப்பட்டது.

இப் பின்னணியிலேயே உலக மயமாக்கல் சமூக, பொருளாதார, கலாச்சார ஏற்பாடுகள் மீதான புவியியல் ரீதியான இடையூறு களினால் பின்தள்ளப்படும் ஒரு சமூகச் செய்முறைத் தொகுதியாக பரிணமித்து வருகின்றது.

இச்செய் முறைத்தொகுதி தேசிய பொருளா தாரங்களை தேசிய மூலதன திரட்டலுக்கான வலையமைப்பாக மாற்றிய மைத்துக்கொண்டு மூலதன இயல ளவுக்கு ஏற்ப தேசிய பொருளா தாரங்களை ஏறுவரிசைப் படுத்தப் படுகின்றன.

இவ் ஏறுவரிசைப் படுத்தலில் ஐரோப்பிய-வட அமெரிக்க நாடுகள் மையத்தை நோக்கி நகர காலனித் துவத்தி லிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட அபிவிருத்தி யடைந்துவரும் புதிய அரசுகள் விளிம்பு நிலையை அடைகின்றன. இந்நிலையில் விளிம்பு நாடுகள் தமது தேசிய சந்தைகளை,தேசிய நிதியினை மையநாடுகளின் தேசிய எல்லை களைக்கடந்த கம்பனி களுக்கு தாரைவார்த்துக் கொள்வதுடன்



அவற்றில் தொடர்ந்தும் தங்கியிருத் தலே தங்களின் இருப்புக்கான வழியாக கருதத் தலைப்படுகின்றன. இதற்கு ஏதுவாக விளிம்பு நிலை நாடுகளின் கொள்கை வகுப்பாளர் கள் பிறிட்டன்வூட் நிறுவனங் களாலும், அவற்றோடு இணைந்த ஒப்பந்தங்களாலும் வழி நடாத்தப் படுகின்றனர்.

இன்று சர்வதேச அரங்கில் இவ்வமைய நாடுகளின் செல்வாக்கு களுக்கே பயன்படுத்தப்படும் நிறுவனங்களாக சர்வதேச ஸ்தாபனங்கள் தொழிற்படும் இவ் வேளையில் முதலாளித்துவம், சோசலிசவாதம் என்ற சிந்தனைப் பள்ளிகளுக்கு அப்பால் "மூலதனம்" முதன்மைப் படுத்தப்படுவதனை கியூபாவின் தலைவர் பிடல் கஸ்ட்ரோ 1998 ஜனவரியில் ஹவானா உச்சி மாநாட்டில் அமெரிக்க பல்தேசிய கம்பனிகள் கியூபாவில் செயற்படு வதற்கு அனுமதி வழங்காமை குறித்து ஐக்கிய அமெரிக்கா மீது குற்றம் சுமத்தியிருப்பதனை நாம் இங்கு கூர்ந்து கவனிக்கலாம்.

இதனை விட சீனாவில் புதிய பொருளாதாரக்கொள்கை, மற்றும் ஒரு அரசு இரண்டு பொருளா தாரங்கள் என்ற நிலையிலிருக்கும் சீனா-கொங்கொங், ஐக்கியம்அகண்ட தேசியத்தை முதன்மைப் படுத்திய தலாளித்துவப் பொருளா தார இந்து தேசியவாத

இந்தியா என்பன மூலதன திரட்டலுக்கான வாய்பாடுகளாகவும் முயற்சிகளாகவும் அமைவதனை அவதானிக்கலாம்.

இப்பின்னணியிலேயே உலக மயமாதல் நான்கு உபநிகழ்வு போக்குகளில் நிகழ் வதனை நாம் அவதானிக்கலாம்.

- உயிரினவியல் சூழலில் உலகமயமாக்கம்.
- பொருளாதாரச் சூழலில் உலகமயமாக்கம்.
- தொழில் நுட்ப சூழலில் உலகமயமாக்கம்.
- சமூகச் சூழலில் உலக மயமாக்கம்.

இந்தநான்கு துறைகளிலும் உலகமயமாக்கம் என்னும் வடிவம் பிரசாரப்படுத்தப் பட்டாலும். ஐரோப்பிய, வட-அமெரிக்க நாடுகளைப் பொறுத்தவரையில் மூலதனத்தை திரட்டுவது தொடர் பான அரசியல் வடிவமே உலகமய மாதலாகும். தேசிய எல்லைகளைக் கடந்த சந்தைச் சக்தியின் துணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடனும் மூலதன திரட்டல் நடைபெறுகின்றது. இத் திறந்த மூலதனத் திரட்டல் போட்டியிலே சமவாய்ப்புக்கள் அற்ற விளிம்பு நிலைநாடுகள் நெருக்கீடு களுக்குள்ளகின்றன.

வருமானப்பங்கீடு ஒரு இரவில் ஒரு சிலரின் கைகளை வந்தடை கின்றன. இதனால் ஏற்படப்போகும் சமூக, பொருளாதார, அரசியல் அச்சுறுத்தல்களை எதிர்வு கொள் ளாது விளிம்புநிலை நாடுகள் இருக்கும் வேளையில் மூலதனம் திரளும் மையநாடுகளின் மக்கள் வருமான சமபங்கீட்டு இன்மை ஏற்படுத்தும் உலகமயமாக்கலுக்கு எதிராக எதிர்ப்பு போராட்டங்கள் நடாத்தி வருகின்றனர். அண்மையில் சியாட்டில் ஒப்பந்தத்தினை எதிர்த்து ஜெனிவாவிலும், ஜி 8 (பெரிய 8 நாடுகள்) தலைவர்களின் கூட்டத்தை எதிர்த்து இத்தாலியிலும் மக்கள் திரண்டு எழுந்துள்ளனர்.

இத்தருணத்தில் அடுத்த ஆண்டு கனடாவில் நடைபெற இருக்கும் ஜீ8 மகாநாட்டை எதிர்ப்பவர்களின் அச் சுறுத்தல் காரணமாக கனடா விலுள்ள மலையொன்றின் முகட்டில் நடாத்த திட்டமிட்டுள்ளனர்.

இம்மைய நாட்டு மக்களின் எதிர்ப்புகளுக்கு முகம்கொடுக்கும் முகமாக உலகமயமாக்கலுக்கு ஆதரவான சிந்தனைப் பள்ளியினர் பாரிய வருமானத்தை ஈட்டித்தரும் தேசிய எல்லைகளைக் கடந்த கம்பனிகள் தமது சமூகத்துக்கு சமூக அபிவிருத்தியும் சமூக நலன்புரியிலும் கணிசமான பங்களிப் பினை நல்கி சமூக அமைதியினை பேண ஆவனசெய்ய வேண்டும் என கோருகின்றனர்.

ஆனால் இக்கோரிக்கைக்கு செவிசாய்க்காத நிலைமையே இன்றைய எதிர்ப்புகளாகும். தேசிய எல்லைகள் கடந்த கம்பெனிகள் சமூக நலம்புரியில் ஈடுபடத் தொடங்கும் பட்சத்தில் இவ் எதிர்ப்புகள் குறையலாம்.

ஆனால் விளிம்புநிலை நாடுகள் அன்நாட்டின் சாதாரண மக்கள் இதுபற்றி என்ன சிந்தித்தார்கள்? எவ்வாறு செயற் பட்டார்கள்? என்றால் யாதும் இல்லை. இவ் விளிம்புநிலை மக்களை அணிதிரட்ட தலைவர்களுமில்லை. நெறிப்படுத்த சிந்தனையாளர்கள் இல்லை. இவற்றுக்கப்பால் மைய நாடுகளின் நேரடி முதலீட்டின் பயனாகப்பெறப்படும் உபரியை அல்லது இலாபத்தைக் கொண்டு தனது சமூகத்துக்குத் தேவையான வற்றைச் செய்யும் கொள்கை வகுப்பாளர்களும் இல்லை.

இந் நிலைில் நேரடி முதலீட்டின் லாபம் மீண்டும் இட்டவனையே சேரும், செய்முறையில் இடை நடுவில்



நேரடி முதலீட்டின் லாபம் மீண்டும் இட்ட வனையே சேரும், செய்முறையின் இடைநடுவில் விளிம்புநிலை நாட்டு மக்கள் பயனடையவில்லை. இந்தவகையில் ஒரு முதலீட்டைச் செய்பவன் லாபத்தை நிச்சயம் எதிர்பார்ப்பான்

முதலீட்டாளனுக்கு லாபம் போய்ச் சேரும் வழியில் விளிம்பு மக்களும் பயன்பெற யாது செய்யவேண்டும். இவ்வாறு பெறப் படும் லாபத்தைக் கொண்டு காலகதியில் எவ்வாறு தங்கி யிருத்தல் நிலையில் இருந்து தப்பித்துக் கொள்ளவேண்டும் என்ற நீண்டகால கொள்கைவிருப்பு மிக அவசியமானதோடு தங்கியிருத்தலை தொடர்ந்து பேணிவர முயலும் பிரட்டன்வூட் நிறுவனங்களின் அழுத் தங்களுக்கு எவ்வாறு முகம் கொடுக்கவேண்டும் என்பதனையும் கருத்திற்கொண்டு செயற்படும் அரசியல் தலைமையும், வெளி யுறவுக்கொள்கையும் அவசியமான தாகும், இதற்கு சமாந்தரமாக தகவல் புரட்சி எனக்கூறிக்கொண்டு சந்தைச் சக்திக்கும், நுகர்வுச் சக்திக்கும்.

இடையிலான தொடர் பாடலை எவ்வாறு எதிர்கொள்வது என்ற காத்திரமான கலாச்சார சிந்தனைக்கு காந்தியம் மீள2வலியுறுத்தப் படலாமா?. என்ற சிந்தனை பரிசீலிக்கப்படலாம்..

அதேவேளை காந்தியம் இன்றைய உலகமயமாதலின் சர்வதேச அர சியலுக்கு, (மூலதன திரட்சிக்கான அரசியலுக்கு) காத்திரமாமன வழி வகை செய்யுமளவிற்கு அதனிடம் சிந்தனைகள் இல்லை. அது காந்தியத்தின் போதாமை என்றும் கூறலாம். உள்ளக அரசியலுக்கு காந்தியமும், வெளியக அரசி யலுக்கு வலுவான மாற்றுத்திட்டம் தேவைப்படுகிறது. இதுபற்றி உரக்கச் சிந்திக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம்

இந்த வகையில் மூன்றாம் மண்டல நாடுகளில் உலகமய மாதலின் உட்கிடைக்கை யதார்த்த பூர்வமாக மக்களுக்கு விளங்கப் படுத்தல், வேண்டும். அதற்கு தடையாகவுள்ள அவர்களது நில வுடமைக்காலம் தொட்டு காலத் துக்கு காலம் வரை குடி கொண்டுள்ள மௌனப்பண்பாடு உடைத்தெறியப்படல் வேண்டும். இதுவே உலகமயமாதலை எதிர்கொள்ளும் வழிவகை எனக் கூறலாம்?.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டில்

பட்டம் செய்தே பறக்க விட்டோம்
பல்லுக் காட்டிச் சிரித்து நின்றோம்
வட்டம் இட்டு ஆகா என்றோம்
வசந்தம் இதுவென எண்ணி மகிழ்ந்தோம்
தட்டம் ஏந்தி நடனம் ஆடினோம்
தக தக எனவே தாளம் போட்டோம்
தோட்டம் வைத்து தண்ணீர் விட்டோம்
தோண்டி மண்ணில் சிலைகள் செய்தோம்

சின்னப் பானை வேண்டி வந்து
இன்பப் பொங்கல் பொங்கி மகிழ்ந்தோம்
சிந்தை வியந்து தந்தை தாயார்
மெச்சிப்புகழ்ந்து மேன்மை செய்தார்
சிப்பி தேடி எடுத்து வந்தோம்
அப்பி வளவில் அனைவரும் கூடி
சிறப்பாய் ஓட்டம் போட்டி எல்லாம்
நடத்திக் காட்டி நயமாய் வாழ்ந்தோம்

அடர்ந்த பத்தை செடிகள் எல்லாம்
வெட்டி வெளியாய் ஆக்கி ஆங்கே
கழகம் அமைத்து பந்து உருட்டி
வேடம் போட்டு மீசைகள் வைத்து
நாடகம் நடித்து நடனம் ஆடி
கூடிய தோழரொடு குதூகலமாக
வீடகம் எமக்கு இது எனக் கொண்டு
வீறுடன் வாழ்ந்து மகிழ்ந்து இருந்தோம்

வீட்டுக் கோடியில் கோயில் கட்டி
விதவித மாய்பல அலங்காரம் செய்து
வேட்டி சால்வை இடுப்பில் கட்டி
வீபூதிக் குறிகள் சந்தனம் பூசி
பாட்டுப் பாடிப் பதிகம் ஓதி
பருவத் தோழர் பலரும் கூடி



நாட்டிவைத்த இன்பம் கோடி
நல்லதோர் வாழ்வை அன்றுநாம் பெற்றோம்.

ஏட்டிக்குப் போட்டி வீட்டுக்கு வீடு
ஏடுதூக்கி எழுத்துக் கூட்டுதலே வினை
கூட்டி நண்பர் சேர்க்க ஏலா
சூழ்தல் மோதல் அணைத்தல் இலை
ஆட்டம் இல்லை ஓட்டம் இல்லை
அன்பு கூர்ந்து பேசுதல் இலை
நாட்டம் இவர்க்கு போட்டி என்றே
சிறாரின் வாழ்வு சிதைந்ததே இன்று
ஐந்தாம் ஆண்டின் அகமகிழ் வாழ்வை
இன்றெம் சிறார்க்கு மீட்டளிப்போமா?

-அழ. பகீரதன்-


## விடியலுக்காய்

இருளின் போர்வையை
கிழித்தன ஒளிக்கதிர்கள்
பூமிப் பந்தெங்கும்
சிவந்தன செங்குருதியாய்
விடியலுக்காய் தாங்கிக்கொண்டேம்
பல துன்பச் சுமைகளை
ஆனால் என்ன இயற்கையைப்போல்
திரும்பத்திரும்ப இருள் கவ்வ
மீண்டும் மீண்டும் விடியலுக்காய்
காத்திருக்கின்றோம்!

இராம ஜெயபாலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொண்டிருந்தாள். பிக்காசோ கிறுக்கிய ஓவியங்களாய் நிஜ ஜாலங்கள் வானவெளியில் பர ந்து கிடந்தன.

உணர்த்தப்பட்ட புகை யிலையின் நெடிகாற்றில் கலந் திருந்தது. சோளகத்தின் சுகத்தை அனுபவித்தபடியே பறவைகள் கூடுகளை நோக்கி பறந்து கொண்டிருந்தன. வீட்டின் முன் பாகத்தில் தினசரியைப் படித் தவாறு அமர்ந்திருந்தாள் பார்வதி..

வாசலில் யாரோ வந்து நிற்பது போன்ற பிரமைநிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களை அவளாலேயேநம்ப முடியவில்லை. அவன் தான். அவனேதான் நின்றிருந்தான். சில கணப் பொழுதுகள் உறைந்து போனாள். பின் தன்னைக் சுதாகரித்துக் கொண்டு “தம்பி” என பலமாய் கத்த எண்ணி ஏதோ ஒன்று

# - இருள் -

**சேகர்** முகமாலை

தடுக்க அமைதியாய் வாசலுக்கு ஓடி அவனை அணைத்துக் கொண்டாள்.

அவனது கரத்தைப் பற்றி விம்மியவளை அவனும் அணைத்துக் கொண்டு உள்ளே நுழைகிறான் தேவன்.

“ஏன் அம்மா இப்ப அழுகிறாய்? ஒண்டுக்கும் யோசியாதேங்கோ! நான் நல்ல மாதிரித்தான் இருக்கிறன்” சமாதானமாக தாயை சமாளிக்க முனைந்தான். ஆனால் எவிதில் பலனேதும் ஏற்படும் போல் தெரியவில்லை. அயல் வீட்டைக் கருதிக் கொண்டோ என்னவோ, அவளது அழுகை கூட அடக்கமாக இருந்தது.

அந்த நாற்சார வீட்டின் உள் முற்றத்தில் கிட்டினர் படுக்கையாய்க் கிடந்தார். இடை யிடையே எழுந்து இருமிக் கொண் டிருந்தார் அவரின் பலவீன மான இருமல் சத்தம் அவரின் இருப்பை இனங் காட்டிக் கொண்டிருந்தது.



“அம்மா நான் வந்திருக்கிற விசயத்தை அப்பாவிற்கு பாத கமில்லாதபடி சொல்லுங்கோ நான் பின்னால வாறன். ”

தாயிடம் தணிந்த குரலில் கூறிவிட்டு, வீட்டின் வெளிப் புறம் ஒருதரம் தளாவிய நிலையில் பார்வையை ஓட விட்டான். இதற்குள் கிட்டினரின் இருமல் ஒலி இடைவெளியின்றி தொடர்ந்து கேட்கிறது.

“ தம்பி! தம்பி!! ”

அவரின் குரல் ஏக்கத்துடன் ஒலித்தது. தாம திப்பது நல்லதன்று என்பதை புரிந்து கொண்டவன்.

உடனடியாகவே வீட்டினுள் நுழைகிறான். தான் அழுது ஆர்ப்பாட்டம் செய்தால் கண வன் பாதிக்கப்படுவான் என்ற எண்ணத்தில் பார்வதி தன் அழுகையை சிரமப்பட்டு அடக் கிக் கொண்டு பேசினா[illegible] தம்பி நீ எங்களை விட்டுப் போன கையோட அப்பாவும் படுக்கேல போட்டார்.”

எல்லாம் எனக்குத் தெரியுமம்மா, நான் நேரில்வந்து பார்க்கிற நிலமேல இருக்கேல்ல. இப்ப கூட எப்படியெண்டாலும் பார்க்க வேண்டும் என்று தான் வந்தனான் என்று அவன் கூற

“எப்படி தம்பி இருக்கிறியே” கிட்டினர் [illegible] போது நா தழுதழுத்தது “ந[illegible] இருக்கிறனப்பா! நீங்கள என்னைப் பற்றி யோசிச்சு வீணா மனதை அலட்டிக் கொள்ளா தேங்கோ”

அவன் நிதானமாக பேசினான். பார்வதி அவசரமாக தேநீர் தயாரித்துக் கொண்டு வந்தாள், தேவன் அதை ஆவலோடு வாங்கிப் பருகினான்.

“என்ர கையாலை நீ சாப்பிட்டு எவ்வளவு காலம்” என்று கூறி தாய் விம்ம, சைகை காட்டி அடக்கினான் அவன்.

“தங்கச்சியவை எல்லாம் எங்கை போட்டினம்” அவன் ஆவல் கேள்வியாய் கிளம்பியது. தந்தை சிரமப்பட்டு பதிலளித்தார்.

“மூத்தவளை ஒரு மாதிரி அங்க இஞ்சையெண்டு கடன்வாங்கி பேரம்பலத்தாற்ரை பெடியனுக்கு கட்டி வைச்சிட்டம். அவள் இப்ப லண்டனிலை இருக்கிறாள்.

இளையவள் எங்களோடைதான் இருக்கிறாள். இப்ப வெளியிலை யாரோ சிநேகிதியிட்ட போட்டா ளாம்.”

அவர் கூற தான் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நழுவி விட்டோமோ என்று தனக் குள் எண்ணிக் கொண்டான்.

இருந்தும், தன் கடமை பரந்த அளவில் எங்கோ ஒரு இடத்தில் நிறைவு செய்யப்படு கிற தென்ற திருப்தி மனதில் எழ அமைதியானான்.

"நாங்கள் வாங்கின கடனையெல்லாம் மருமோன் நல்ல பெடியண்டபடியால அடச்சுப் போட்டான். இவள் இளையவள் அமராவிற்கும் எங்கையாவது பார்த்து செய்து விட்டால், நான் கொஞ்சம் நிம்மதியாய் கண்ணை மூடலாம்."

என்று தொடர்ந்து இடைக்கிடையே இருமியபடி தந்தை கூறி முடித்தார்.

'அப்பா இப்ப அமைதியாய் இருங்கோ! நான் முன்னுக் கிருந்து அம்மாவோடை கதைச் சுப் போட்டு வாறான்.

என்று தந்தையிருந்த இடத்திலிருந்து மெதுவாக விலகி னான் தேவன். அவனைத் தொடர்ந்து வந்த தாயிடம் "அம்மா என்னைப் பற்றியாரும் விசாரிக்கிறவையே" அவனது கேள்வியில் பதட்டமும், கவலை யும் கலப்படமாய் இருந்தது.

"கொஞ்சநாளா கேட்டவை தம்பி. நீ இந்தியாவுக்கு போகேக்க காணாமல் போட்டா யென்று சமாளித்துப் போட்டம்"

இதைச் சொல்வாதற்கு அவள் சிரமப்பட்டிருக்க வேண்டும். அதனால் தான் அவள் வார்த்தைகளை மென்று விழுங் கியபடி பேசினாள்.

"அது தான் நல்லதம்மா, நீங்கள் பிரச்சனை இல்லாமல் இஞ்ச இருக்கிறதுக்கு அப்படி சொன்னது தான்சரி" என்று கூறி தாயிற்கு ஏற்பட்டிருந்த சங் கடத்தைத் தணித்தான்.

முன்பெல்லாம் தேவன் பாடசாலை விட்டு வந்த பிற்பாடு அவனது புத்தகப்பையை பரி சோதிப்பதில் பார்வதிக்கு அலாதிப் பிரியம். ஆனால் இன்று அவன் கையில் வைத்திருந்த பொதியை பிரித்துப் பார்க்கும் தைரியம் அவளுக்கு இல்லை.

அவள் அவனது முகத்ததைக் கூர்ந்து பார்க்கிறாள். கடந்த காலங்களில் அவன் நடந்து வந்த பாதைகளின் சுவடுகள் அவன் முகத்தில் அப்பிக் கிடந் தன. இருவரும் ஏதேதோ பேசினார் கள்.

"அம்மா பசிக்குது சாப்பிட ஏதாவது கிடந்தாத்தாவன்" என்று தாயிடம் உரிமையுடன் கேட்டுவாங்கிசசாப்பிட்டான் தேவன். இன்று மின்வெட்டு என்பதால் விளக்கை ஏற்றினாள் பார்வதி.

"தம்பி கவனமாய் திரிராசா இதுக்கு மேல எதுவும் எனக்கு சொல்லத் தெரியேல்ல."



ஒரு சாராசரி தாயின் ஆத்மார்த்தமான ஈடுபாடு அவ ளது வார்த்தையில் தெரிந் தது.

தொடர்ந்தும் "நாங்கள் கோயி லுக்குப் போற நேரமெல் லாம் உன்னை நினைச்சுத்தான் கும்பிடுறது. ஏதோ கடவுள் தான்.........." -என்றாள் தாய்.-

"அம்மா என்னைப் பற்றி யோசிச்சு நீங்களும் வருத்தக் காரியானால் எங்கட குடும் பத்தை யார் கொண்டி முக்கிறது? அதால நீங்கள் தைரியமாய் இருங்கோ! நான் எங்கையெண்டாலும் சமாளிச் சுக் கொள்ளுவன்.

தாயைத் தேற்றினான். சில நிமிடங்கள் மௌனத் துடனேயே கலைந்தன.

"அது சரி சாப்பாடெல்லாம் என்ன மாதிரி" அக்கறையோட விசாரித்தாள் தாய்.

"முந்தியம்மா வெள்ளிக் கிழமை விரதம் பிடிக்கச் சொன்னா அடம் பிடிப்பன்.

இப்ப நான் அப்படியில்லை. நல்லா விரதமிருக்க பழகி விட்டன் என்று விட்டுச் சிரித்தான்.

இதற்கு மேலும் இங்கு தாமதிப்பது நல்லதல்ல என்பதை

புரிந்து கொண்ட தேவன் "அம்மா போட்டு வாறன்! இனியும் சந்தர்ப்பம் கிடைத் தால் வாறன்!" என்றவன் தொடர்ந்தும்"அதுசரி தங்கச்சி அமரா எங்கையம்மா, இன்னும் வரேல்ல" உருக்கத்தோடு கேட்டான்.

"யாரோ சிநேகிதியின்ரை பிறந்த தினமென்று போன வளடா, நாளைக்குத்தான் வருவாள். இண்டைக் கெண்டு பார்த்து........" மேலும் தாய் கூறப்போவதை புரிந்து கொண் டவனாய் "பரவாயில்லையம்மா

அமராவைக் காணாமல் போறது எனக்கும் வருத்த மாத்தான் கிடக்குது. இனி மேலும் சந்தர்ப்பம் கிடைக் கேக்கை பார்ப்பம். நான் வந்து போனதாய் சொல்லுங்கோ அவ ளுக்கு" கூறும் போது அவனது குரல் ஏனோ சிக்கிக் கொண்டது. தொடர்ந்தவன்,

"அம்மா சிலதுகளுக்காக, நாங்கள் சிலதுகளை தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும்" என்ற வாறு உள்ளே சென்று தந் தையின் கரத்தை அழுத் தமாய் பற்றி அவரிடம் விடைபெற முனைகிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சிரமப்பட்டு, சிரமப்பட்டு எழுந்து உட்கார்ந்து "தம்பி எனக்குக் கொள்ளிவைக்க வருவியே?" என்று கண்ணீர் விட்டு அழுதார்.

"அப்பா இனி நான் இஞ்சை தான் இருப்பன்: அடிக்கடிவருவன்! என்று சமாளித்துக் கொண்டு," நீங்கள் நல்லா சாப்பிட்டு உடம்பை கவனித்துக் கொள்ளுங்கோ! நான் போட்டு வாறனப்பா!!" என்றவாறு தன் கரத்தை விடுவித்துக் கொண்டு வாசலுக்கு வந்தான் தேவன்.

தந்தையைத் திரும்பிப் பார்க்கும் அளவிற்கு அவனுக்கு அப்போது மனோதைரியம் வர வில்லை.

அவன் ஆட்பட்டிருக்கும் மனச்சஞ் சலங்கள் எதையும் வெளிக்காட்டி விடக் கூடாதே என்பதில் அவன் குறியாக இருந்தான்.

அவன் வாசலை தாண்டி வீதிக்கு வந்தபோது வீதியில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஏதாவது----------- பார்த்தவாறு தாய் நின்றிருந்தாள்.

வீதி அடங்கியிருந்தது. ஆனால் அவர்களது இதயங் களில் ஆயிரம் ஆயிரமாய் எண்ணங்களின் பயணிப்புகள்.

இப்போது, அந்தி தன் முகத்தை முற்றாக இழந்திருந்தது.

"அம்மா, வாறன்!"

என்று கூறி வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினான்.

அவனது உருவம் கண்ணிலிருந்து மறையும் வரை சிலையாய் நின்றிருந்த அவளின் கண்களில் நீர் திரையிட்டது. இருந்தாலும் நெஞ்சின் ஓர் மூலையில் ஏதோ ஒரு நம்பிக்கை கிற்று. கணவனின் இருமல் ஒலி கடமையை நினைவுறுத்த வீட்டினுள்ளே நுழைகின்றாள்.

-- யாவும் கற்பனை --





# பாலுன் கொங் (Falun Gong)

## இதுவும் ஒரு அமெரிக்க மதஆயுதம்

- புவியன்

பாலுன் கொங்சீனாவிலுள்ள அதிதீவிர மதப்பிரிவு களில் ஒன்று மேற்குலக செய்தி ஊடகங்களு க்கு ஊடாக நன்கு பிரபல்யப்படுத் தப்பட்ட இம்மதப் பிரிவு சீனா வுக்கு எதிரான அமெரிக்க பிரச் சாரத்துக்கு ஒரு ஆயுதமாக நன்கு பயன்படுத் தப்படுகிறது.

தனிமனித உடல் உள நல மேம்பாட்டுக்கான பயிற்சியாக எம்மிடையே யோகாசனப் பயிற்சி முறை நீண்டகாலமாக இருந்து வருவது போல (Qigong) என் பதும் மத வழிபாடுகளுடன் தொடர்பற்ற ஒரு மென்மையான பயிற்சி முறையாக சீனாவில் பாரம்பரியமாக இருந்து வருகிறது. இப்பயிற்சி முறையுடன் சீனாவில் பண்டுதொட்டு இருந்து வரும் பழைய ஐதீகங்களையும், மூட நம்பிக்கைகளையும் அடிப்படை யாக வைத்து உருவாக்கப் பட்டதுதான் பாலுன்கொங்.

இன்று உலகெங்கும் சிறு சிறு குழுக்களாக உருவாகிவரும் புதிய புதிய மதப் பிரிவுகளில் ஒன்றான இதன் பிரத மகுரு (Li Hongzhi) இப்பொழுது அமெரிக்காவில்,இருந்து வருகிறார். உலகம் மிக விரைவில் எரிந்து அழிந்துவிடும், எனவும் தம்மைப் மட்டுமே அப்பேரழிவில் இருந்து பாதுகாக்கப்படுவர் என்றும் அவர் கூறிவருகிறார். அமெரிக்கா தனது ஆதிக்க நோக்கங்களுக்கு அடி பணிய மறுக்கும் நாடுகளை பிளவுபடுத்தி பலவீனப்படுத்தி பணியவைப் பதற்காக அவ்வத் தேசங்களின் இனமத அரசியற் பிரச்சனை களுக்குள் தலையை நுளைப்பதும் இனமத சுதந்திரங் களின் காவல னாக தன்னைப் பீத்திக் கொள்வதும் அதன் அரசி யற் தந்திரங்கள் என்பது இன்று உலகறிந்த விடயம். இந்த வகை யில் உலகெங்கும் தனக்கு சாதக மாகச் செயற்படும் பல்வேறு மதப் பிரிவுகளுக்கு நிதியளித்து பயன் படுத்துவது போலவே "பலுன் கொங்"கையும் தமது நலன் களுக்கு பயன்படுத்துகிறது.

மனிதனின் அடிப்படை நலன்கள் சுதந்திரங்கள், வாழ் வுரிமைகள் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாது. உடமை வர்க்கங்களின் உணர்வுகளையும் இலகுவாகப் பற்றிக்கொள்ளும் இன, மத, கலாச்சாரப் பிரச்சினைகளை மட்டும் தமது தேவைக்கு அளவாக தூண்டி வளர்ப்பது மிகச்சுலபமானது என்பது மட்டு மல்ல, அதையும்விட,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகரீதியாக அமெரிக்கா கட்டிக்காக்க எண்ணும் சுரண்டல் அமைப்புக்கு எதிராக எதிரான மக்களின் விழிப்புணர்வை மழுங்கடித்து திசைமாற்றும் மாபெரும் சூட்சிமமும் இதற்குள் அடங்கியுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் சீனாவுக்கு எதிரானவை மட்டுமன்றி உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் எதிரான ஒரு செயல்முறையாக தொடர்ந்தும் இடம்பெறுகிறது.

சீனா தனது இறுக்க மான சோஷலிச பொருளாதாரக் கொள்கை நிலைப்பாடுகளில் இருந்து தன்னைத் தளர்த்திக் கொண்டபோதும் அமெரிக்காவின் உலகநலன்களுக்கு ஒரு தடையாகவும், அதன் ஏகாதிபத்திய பொருளாதார அரசியல் கருத்துக்களுக்கு எதிரிடையாகவும் உள்ள ஒரு பலமான நாடாக இருந்து வருகிறது.

சோவியத்யூனியன் வீழ்ச்சிக்குப் பின்னரும் அமெரிக்காவின மிரட்டல்களுக்கு அடிபணியாது. அதன் ஊடரவல் நாசவேலைகளை முறியடித்து அதற்குச் சவாலாக இன்றுவரை நின்று பிடித்து வருகிறது.

இதனை முறியடிப்பதற்கு எடுக்கப்படும் பல்வேறு நாடவடிக்கைகளுள் ஒன்றாகவே "பாலுன் கொங்" மதப்பிரிவினரை சினாவுக்கு எதிராக தூண்டி வளர்த்து வருகிறது.

1990இன் நடுப்பகுதியில் லீகொங்ஜீ அமெரிக்கவுக்கு விஜயம் செய்ததன் பின்னர் தான் பாலுன்கொங் மதப் பிரிவினரின் நடவடிக்கைகளில் பெருமாற்றம் ஏற்பட்டது. வேறு எந்த மத நிறுவ னமும் பெற்றிராத பெருந்தொகைப் பணத்தை அமெரிக்கா அரசிடம் இருந்து பெற்றதுடன் மிகச்சிறு தொகையினராக இருந்த இவர்கள் குறுகிய காலத்தில் பெரும் ஆர்ப் பாட்டங்களை நடத்தும் அளவுக்கு தம்மை வளர்த்துக் கொண்டனர்.

வெளிநாடுகள் பலவற்றில் தமது கிளைகளை நிறுவி தமது ஸ்தாபன பலத்தையும் பலப் படுத்திக் கொண்டனர்.

வாழ்க்கையின் தேவைகளுக்கும் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கும் தீர்வுகாணமுடியாமல் திணறும் தனிமனிதர்களை ஆண்டாண்டு காலமாக மதங்கள் தம்பால் ஈர்த்து வந்த வழமை யான சூழலையும் வழிமுறை களையுமே "பாலுன் கொங்" மதப் பிரிவினர் மிகத் தீவினமாகப் பயன் படுத்திக் கொள்கின்றனர்.

தனி மனிதர்களின் இயலாமையை வலி யுறுத்துவது அவர்களிடம் இயல்பாகவே உள்ள எதிர்வினைத் தன்மையை முறியடிப்பது சமூகத் திலிருந்து அந்நியப்படுத்தி அவர்களை தனிமைப் படுத்துவது, அவர் களது பகுத்தறிவை மழுங்கடித்து அவர் களைகட்டுப்படுத்துவது, இவற்றின்



மூலம் பழகிப்போன குருட்டுத் தனமான தீவிர பின்பற்றலுக்கு அவர்களை தயார்படுத்தி தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வது. இதுவே இவர்களது வழி முறையாகும். இவர்களது இத்தகைய நடவடிக்கைகளுக்கு சீன அரசியல் பொருளாதார கலாச்சார விடயங்களில் ஏற்பட்ட தளர்வும் அதன் தாக்கங்களும் துணையாக உள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

தன்னை நாடிவரும் மக்களிடம் தன்னை ஒரு கடவுளாகவே பாவனை செய்து கொள்ளும் லீகொங்ஜீ தன்னை உணர்ந்து தன்மீது பூரண விசுவாசம் கொண்டு தனது கட்டளைக்கு அடிபணிந்து தம மைத்தாமே அழித்துக் கொள் வதன் மூலம் ஒருவர் தன்னுடன் இணைந்து புதிய உலகுக்குக் குள் புகமுடியும் என நம்ப வைத்து வருகிறார். உடலின் மீதான தொடர்பை அறு, உலகத்தின் மீதான பற்றைவிடு என்பது இவரது தெய்வீகக் கட்டளை யாகும் 1999ம் ஆண்டு யூலை மாதம் "பாலுங்கொங்" மதப்பிரிவு சீனாவில் தடை செய்யப்படும் வரை இவரது இக்கட்டளையை ஏற்று 1700 பக்தர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

இத்தகைய சம்பவங்கள் மதநம்பிக்கையின் பெயரால் நீண்ட காலமாகவே நடைபெற்று வந்துள்ளன, கடந்த சில தசாப்தங்களுக்குள் யப்பான் நாட்டின்

ஓம்சிறின்கோ மாப்பிரிவு நச்சு ஐரோப்பிய, ஆபிரிக்க, தென்னமெரிக்கா, அமெரிக்க நாடுகள் பலவற்றில் கிறித்தவ மதப் பிரிவினர் சிலர் பலநூற்றுக் கணக்கான மக்களை ஒன்றுகூட்டி சுவர்க்கத்துக்குச் செல்லும் நம்பிக்கையை ஊட்டி தற்கொலை செய்ய வைத்துள்ளனர்.

இவை பல்வேறு மதப் பிரிவினராலும் மேற்கொள்ளப்படும் மக்கள்விரோத நடவடிக்கைகளின் தொடராகும்.

சீனாவில் பழையதும் புதியதுமான பல்வேறு மதப் பிரிவுகளும் உண்டு சீனமக்கள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் விரும்பிய மதங்களைப் பின்பற்றும் உரிமையும் உண்டு. அதேபோன்று மக்களின் நல்வாழ்வுக்கும் பாதுகாப்புக்கும் ஊறுவிளைவிக்கும் மதங்களை தடை செய்யும் உரிமையும் உலகில் ஏனைய நாடுகளில் உள்ளது போலவே சீனாவிலும் உண்டு "பாலுன்கொங்கும்" அதன் மக்கள்விரோத நடவடிக்கைகளுக்காக தடைசெய்யப்படும் வரை அந்த உரிமையை அநுபவித்து வந்தது.

இந்த வகையில் "பாலுன்கொங்" மதப்பிரிவினருக்கான மதவழிபாட்டு உரிமைமறுப்பு எனும் குற்றச்சாட்டை சீனாவில் அமெரிக்க நலன்களை மேலும் அதிகரிப்பதற்கான மறுப்பாகவே உலகம் புரிந்து கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாறாங்கற்களைக் கொண்ட மனது

*-பளை கோகுலராகவன்-*

கனவு பிழிந்த வாழ்க்கை
பாறாங்கற்களை சுமந்தபடி நெழியும்
றொட்டிக்கு குழைத்த கோதுமை மாவைப்
போல நெழியும் பாறாங்கல்
சரிய நெழியும்.
நெழிச் சரியும்.
உருகி வழியும்.
தீப் பாறை.
ஆன்மாவின் அணுவில்
சப்பழிஞ்ச பாறாங்கல்
வெடித்துப் பிளக்கும் — பின்
எக்கி எக்கி ஒன்றாகப் பிணையும்
மலையுருக் கொண்டு
பிசாசை உடுக்கடித்து வீட்டு எங்கோ
துவாரத்தால் நுழைய,

கனவுகள் கோரமாய் எழுகின்றது
வெடித்துச் சிதறும் மண்டை
பாறாங்கற்களை தேடித் தேடி
மையத்தில் பாறைக் குழம்புகளில்
கொதித்த மனதை திருடி.
தீயில் வீசும்.
வரிசையாய் வருகின்றன
பாறாங்கற்கள்.

என்னுடையவையும் எனது மனிதர்களுடையவையும்
எனது ஒருதலைக் காதலியினுடையவையும்,
நெஞ்சாங்கட்டை தறிக்கப்போன விறகுவெட்டி
பாறாங்கற்களை ஏன் காணாது
விட்டான்.
உங்களிடம் எத்தனை பாறாங்கற்கள்
இருக்கின்றன.



# கரப்பான் பூச்சிகள்

**சித்திரா**




துரியோதனன் துச்சாதனன் உள்ளிட்ட கௌரவர் எல்லோரும் உருவத்தில் குணவியல்புகளில் வேறுபட்டிருந்ததாக எனக்குத் தோன்றவில்லை எல்லோரும் ஒரேவிதமான ஆடைகளையே அணிந்திருந்தனர். கிரீடம், பாதணிகள் இவை கூட வித்தியாசப் படுத்த முடியாதவையாக இருந்தன. இவையெல்லாம் என் கண நேரப் பார்வையில் பதிவாகிவிட்ட அம்சங்கள். மற்றும்படி எதையும் நான் சுதந்திரமாக அவதானிக்க முடியாதவளாய் இருந்தேன்.

எனக்கு அச்சம் மிகுதியாக ஏற்பட்டது. அடி வயிற்றிலிருந்து பீதி ஒரு தீப் பந்தமாய் எழுந்து உடலெங்கும் ஒரு பகுதி மிச்ச மில்லாமல் பரவிற்று. இப்போது அஞ்ஞாதவாசம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது முடிவதற்குள் அஞ்ஞாதவாசிகள் ஒவ்வொருவரும் தேடிக்கண்டு பிடிக்கப்பட்டு அடியோடு அழிக்கப்பட்டு புதைக்கப்படல் வேண்டும். இவ்விதம் துரியோதனன் அடிக்கடி சொல்வதாக சேடி செம்பவளக் கன்னி நான் அந்த மகளிர் சத்திரத்திற்கு வந்து சேர்ந்த அன்றே கண்களில் பயம் கொண்டவளாகச் சொன்னாள்.

அவளுடன் என்னுடைய முதலாவது உரையாடல் இவ்விதமே ஆரம்பமாயிற்று உண்மையிலேயே அவள்சொன்னது எனக்கு பயத்தை ஏற்படுத்தவே செய்தது. இருந்தாலும் நான் சாதாரணமாக இருப்பது போலவே காட்டிக் கொண்டேன்.நான் சாதாரணமாக இருப்பது போல காட்டிக் கொண்டது அவளை வியப்பில் ஆழ்த்தியிருக்க வேண்டும் "என்னடி, மேகலா நான் சொன்னது கேட்டு சிறிதும் பயமடையாதிருக்கின்றாய்? என்று கேட்டாள் அவளுடைய அந்தக் கேள்விசாதாரணமாக இருந்தலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற எனது பாசாங்கு நிலையின்உறுதிதன்மையை குலைத்துவிடப் போதுமானதாக இருந்தது. நான் அவளைக் கேட்டேன் "என்னடிபயம்? எதற்காகப்பயம்?" "நீ அஞ்ஞாதவாசிகளின் தேசத்திலிருந்து வந்திருப்பதால் தானடி பயம்" செம்பவளக்கன்னி பயமடைந்த வளாகச் சொன்னாள். "அதற்காக நான் அஞ்ஞாதவாசியாகி விட முடியுமா?" இது செம்பவளக கன்னியிடம் நான் கேட்ட நியா யமான கேள்வி "உன்னுடைய கேள்வி நியாயமானதடி மேகலா ஆனால் கௌரவர் ஆதிக்கத்திற் குட்பட்டிருக்கும் இந்த நிலத்தில் அஞ்ஞாத வாசிகளின் நிலத்திலிருந்து வந்து சேர்வோர் எவராயினும் அஞ்ஞாத வாசிகளாகவே கருதப்படுகின்றனர்.

இங்கு நியாயம் அநியாயம் என்ற பகுப்பாய்வுக்கே இடமில்லை என் பதைப்புரிந்து கொள்" அவன் பதில் என்னை அச்சத்தின் வசப்படுத்தியது. "நான் இங்கே வந்திருப்பது அவர்களுக்கு எப்படித் தெரியப் போகிறது" நான் துணிவை வரவழைத்துக்கொண்டு கேட்டேன்.

"கௌரவர்கள் எப்போதும் தங்கள் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதி லேயே குறியாய் இருப்பவர்கள். அதனால் இங்கு இடம்பெறும் ஒவ்வொரு நிகழ்வையும் உன்னிப்பாகக் கவனிப்பதற்கு சேவகர்கள் நியமிக்கப் பட்டிருக்கின்றார்கள். இதனால் நீ இங்கு வந்திருப்பதை தெரிந்து கொள்வதில் அவர்களுக்கொரு சிரமமும் இல்லை நீவந்திருப்பதை அறிந்து கொண்டதும் இந்தச் சத்திரத்தை நோக்கி அவர்களின் மரகதத்தேர் விரைந்து வரும் உன்னை ஏற்றி செல்வதற்கு" அவள் சொன்னதைக்கேட்டு நான் பதறிப்போய் விட்டேன்.

"என்னடி பயமுறுத்துகிறாய். இப்போது நான் என்னடி செய்வது எனக்கு இந்தச் சத்திரத்திலே உன்னைத்த விர யாரையடி தெரியும் நான் ஒரு கதியற்றவள் போல் ஆகிவிட்டேனேயடி. நான் தப்பித்துக் கொள்வதற்கு மார்க்கமே இல்லையா?" நான் அழத்த யாராகி விட்டவளாகக் கேட்டேன்.

"உன்னைப்பார்க்க எனக்கு பரிதாபமாக இருக்கிறது. நீ தப்பிப் பதற்கு எந்த மார்க்கமும் இல்லையடி நான் உனக்காக ஒரு சொட்டுகண்ணீர் சிந்துவதைத்தவிர என்னால் எதுவும் செய்யமுடியாது. நான் கதியற்றவளாகவே இருக்கிறேன்"

செம்பவளக்கன்னி சொன்ன பதில் என்னைப் பாலைவனத்தில் நிறுத்தியது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை எங்கும் திட்டுத் திட்டாகமணல் குவியல். என்னை எரித்து ஒரு பிடி சாம்பலாக்கி விடும் உத்தேசத்தில் சூரியன் தகித்துக் கொண்டிருந்தது நான் நிழல்தேடி ஓடினேன். என்னால் பாதுகாத்துக் கொள்ள ஓடுகிறேன். முடியவில்லை, என்னால் முடியவில்லை. மணலில் கால்கள் புதைந்து குப்புறவிழுகிறேன்.



என்னால் எழுந்திருக்க முடியவில்லை. மெல்ல மணலில் புதைந்து மறைந்து போகிறேன் நான் மறைந்து போன இடத்தில் ஒரு மணற்றிட்டு உருவாகி விட்டது கடவுளே! எத்தனை மணற்றிட்டுகள்! கடைசியில் செம்பவளக் கன்னி சொன்னது நடந்தேவிட்டது. "நீ அஞ்ஞாத வாசிகளின் தேசத்திலிருந்து வந்தவள் தானே? "சீற்றத்துடன் என்னைப் பார்த்துக் கேட்டான் துரியோதனன் துச்சாதனன் முதலியோர் என்னையே விழுங்கிக் கொண்டிருந்தனர்.

"ஆம்" என்பதற்கு அடையாளமாக நான் தலையசைத்தேன். "அடியே, நான் கேட்கும் வினாக்களுக்கு வாய் திறந்து பதில் சொல்லியாக வேண்டும் என்பதை நினைவில் வைத்திரு" துரியோதனன் உறுமினான். நான் அவனை மெல்ல நிமிர்ந்து பார்த்து" "அப்படியே செய்கிறேன் மன்னவா" என்றேன். அதைப் பொருட்படுத்தவில்லை அவன் அகோரமாகக் காட்சியளித்தது அவன் அமர்ந்திருந்த சிம்மாசனம் என்னை மேலும் பயமுறுத்திற்று.

"நீ ஒரு அஞ்ஞாதவாசிதானே?" துச்சாதனன் ஆரம்பித்தான் அவன் குரல் இடி முழக்கத்தையொத்ததாக இருந்தது நான் பயந்து நடுங்கியவளாகப் பதில் சொன் னேன்,"நிச்சயமாக நான் அஞ்ஞாத வாசியில்லை"

"அடியே பேதைப் பெண்ணே இங்கே பொய் சொல்பவருக்கு வழங்கப்படும தண்டனையைநீ அறிந்திருக்க நியாயமில்லை ஆதலால் சொல்கிறேன் கேட்டுக்கொள் நீ பெண்ணாக இருப்பதால் முதலில் இரண்டொரு நாட்கள் நிர்வாணமாக எங்கள் அனைவருக்கும் பணி விடை செய்தாக வேண்டும் இதன்பின் நீ ஒருகம்பத்தில் கட்டி வைக்கப் படுவாய் எங்களது சேவகர்கள் உன்னைகூரிய ஆயுதங்களால் வேண்டியளவு குத்திக்காயப்படுத்தி விட்டு குற்றுயிரோடு அடக்கம் செய்து விடுவார்கள்" துச்சாதனன் சொன்னது கேட்டு என் உடல் விறைத்துப்போய் விட்டது. "ஐயா காந்தாரியின் புத்திரர்களே சத்தியமாகச் சொல்கிறேன் எனக்கும் அஞ்ஞாதவாசிகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை நான் சாதாரண குடிமகள் என்னை நம்புங்கள்----- என்னை நம்புங்கள்" நான் அழுதுபுலம்பினேன்.

"எங்களைப் பொறுத்தவரை நீ அஞ்ஞாதவாசிகளின் ஒற்றர் படையைச் சேர்ந்தவள் எங்களோடு சல்லாபித்து கொஞ்சிக்குலவி உல்லாசித்து எங்கள் உண்மைத் திட்ட மறிய வந்தவள். நீஒரு சாதாரணக் குடிமகளாயின் இங்கு வந்திருக்க வேண்டிய காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன? என்னடி எங்களை முட்டாள்கள் என்று நினைத்துப் பதில் சொல்கிறாயா?" சீறினான் துச்சாதனன் நான் நடுங்கியவளாக நாக்குளறினேன் "இளவரசே தவறாக எண்ண வேண்டாம். நான் அஞ்ஞாதவாசிகளின் ஒற்றர் படையைச் சேர்ந்தவளல்ல நான் சாதாரண குடிமகள் இது என்தாய் நிலம் என்பதால் வந்தேன்.

என்னை நம்புங்கள்" நீ சொல்வது நகைப்புக் குரியது உண்மையில் நீ ஒற்றர் படையைச் சேர்ந்தவள் அல்ல எனில் எதற்காக இந்தக் காலத்தில் தாய் நிலத்தின் மீது தனிப்பற்று வந்தது எங்களை என்ன மூடக்கழுதைகள் என்றா எண்ணுகிறாய்?நாங்கள் ஊசியிம் காதுக்குள் குதிரைகள் நுழைக் கக்கூடிய மேதாவிகள்" என்று சத்தமிட்டுக் கூறிவிட்டு சிரித் தான் துச்சாதனன்.

எனக்கு இதயத்துடிப்பு மிக வேகப்பட்டது.

நான் கடைசியாக மன்றாடினேன் "காந்தாரியின் புதல்வர்களே! உங்களைக் கைகூப்பித்தொழுகின்றேன். சத்தியமாக நான் அஞ்ஞாத வாசியல்ல என்னை நம்புங்கள்" நான் சொன்னது கேட்டு துச் சாதனன் இடி இடியெனச் சிரித் தான் அவனுடன் துரியோதன னும் சேர்ந்து கொண்டு சிரித் தான். நான் காதைப் பொத்திக் கொண்டேன்.. "சரி நீ சொல்வதை நாங்கள் பூரணமாக நம்ப வேண்டுமாயின் இதோ நாங்கள் தருகின்ற முடங்கலில் நீ கையொப்பமிட வேண்டும்" துரியோதனன் நிந்தனை விதித்தான் எனக்கு கொஞ்சம் நிம் மதியாக இருந்தது.

ஒரு கையொப்பம் என்னை விடுதலை செய்யு மாயின் கையொப்பமிட நான் ஏன் தயங்க வேண்டும்? எனவே அவர்கள் தரப்போகும் முடங் கலில் ஒப்பமிடச் சம்மதித்தேன்" நிச்ச யமாக நான் கையொப்பமிடுவேன் நான் தயக்க மின்றிக் கூறினேன்.

சேவகன் ஒருவன் ஒரு முடங்கலை ஏந்தி வந்து விரித்து நான் கையொப்ப மிடவேண்டிய இடத்தைச் சுட்டிக்காட்டினான். நான் முடங்கலை வாசிக்க முயன்றேன்துச்சாதனன் உறுமினான் "ஏய் நீ முடங்கலை வாசிக்க முடியாது வாசிக்காமலேயே ஒப்பமிடவேண்டும்" எனக்கு சில நிமிடங்கள் எதையும் சிந்திக்க முடியவில்லை வாசிக் காமல் எவ்விதம் ஒப்பமிட முடியும்? அந்தமுடங்கலில் என்னென்ன எழுதப்பட்டுள்ளதோ? என் மனத்தில் எழுந்த எண்ணங்கள் எனக்கிருந்த சிறிதளவு நிம்மதியையும் குலைத்து விட்டன. "முடங்கலில் என்ன வேண்டுமாயினும் எழுதப்பட்டிருக் கட்டும் எனக்கு இப்போது விடுதலை வேண்டும் எனவே நான் கையொப்பமிடுவதே சிறந்த மாற்று வழியாகும்." எனத்தீர்மானித்தவளாய் அந்த முடங்கலில் சேவகன் நீட்டிய எழுதுகோல் கொண்டு கைவிரல்கள் நடுங்க ஒப்ப மிட்டேன். அந்தக் கணத்தில் இருந்து என் விடுதலை பற்றிய நம்பிக்கைகள் அதிகரித்தன.

"சேவகனே! இங்கிருப்பவர் அனைவருக்கும் கேட்கும் வண் ணம் இவள் கையொப்பமிட்ட முடங்கலை உரத் துவாசி" என்று கட்டளை யிட்டான் துரியோதனன், "அப் படியே ஆகட்டும் மன்னவா" என்று தலை தாழ்த்திவிட்டு முடங்கலைப் படிக்கத் தொடங் கினான் சேவகன்.

*நான் என்னைப்பற்றிச் சொல்வதெல்லாம் உண்மை இதில் எவ்வித பொய்யும் கிடை யாது நான் அஞ்ஞாத வாசி களின் ஒற்றர் படையில் முக் கிய பதவி வகிப்பவள் இப் போது நான் இங்கு கௌரவர் களின் நடவடிக்கைகளை உள வறிவதற்காகவே வந்துள்ளேன் இவ்விதம் உளவறிந்து சொல் வது தண்டனைக்குரிய குற்றம் என்பதை நான் அறிவேன் எனவே நான் செய்த குற்றத் திற்கு என்ன தண்டனையை எனக்களித்தாலும்ஏற்றுக் கொள் ளத்தயராக இருக்கிறேன்.*

இங்ஙனம்

*தங்கள் உண்மையுள்ள*

**மேகலா**

சேவகன் முடங்கலை வாசித்து முடித்தபோது எனக்கு இதயம் துடிப்பை நிறுத்திவிட்டது போன்ற தொரு உணர்வு ஏற்பட்டது என் வலு முழுவதையும் சேர்த்துக்கத் தினேன் "மன்னவா! இதென்ன அநியாயம் உங்களிடம் நியாயம் கிடைக்குமென்று நம்பியல்லவா ஒப்பமிட்டேன். ஒரு அப்பாவியை இவ்விதம் வஞ்சிப்பது நியாயமா? எனக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்பதற்காக வினையை விலை கொடுத்து வாங்கி விட்டேனே. இப் போது என்ன செய்வேன். எனக்கு நீதிவழங்க உங்களைத் தவிர யாரிருக்கிறார்கள். உங்களை முழுமையாக நம்பிய எனக்கு இருதான் நீங்கள் அளிக்கும் பரிகாரமா?"

"ஏய் அதிகம் பேசாதே இப்போது நீகுற்றவாளி உனக்கு பேசும் உரிமை கிடையாது. உனக்கு தகுந்த தண்டனை வழங்குவதே நாங்கள் உனக் களிக்கும் விடுதலை யாகும்" துரியாதனன் சிம்மாசனத்திலி ருந்து ஆவேசத்துடன் எழுந்து கத்தினான் அவனைத் தொடர்ந்து துச்சாதனன்என்னை நெருங்கிய படியே கர்ஜித்தான் "அடியே எங்களிடமா நீதி நியாயம் பற்றிக் கேட்கிறாய்.

எங்கள் அகராதியில் அத்தகைய சொற்கள் எல்லாம் எப்போதோ அகற்றப்பட்டு விட்டன. எங்களில் எவருக்கும் அந்தச் சொற்களுக்கு அர்த்தம் தெரியாது அப்படி யிருக்கும் போது நீ எவ்விதம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி நியாயம் என்று கேள்வி எழுப்பினாய்? எங்களை எதிர்த்துப் பேசும் துணிவை உனக்கு யார் தந்தது என்பதை நாங்கள் அறி வோம். நீங்கள் எவரும் நாங்கள் எது செய் தாலும் சகித்துக் கொண்டிருக்க வேண்டும் எதிர்த்துப் பேசுவதோ நீதி நியாயம் கோரு வதோ எங் களால் தடை செய்யப் பட்டுள்ளது.

"துச்சாதனா இவளுடன் இனியும் என்ன பேச்சு ஆக வேண்டியதைக் கவனிப்போம்" துரியோதனன் கருணையற் றவனானக் கத்தினான்.

"அப்படியே ஆகட்டும் மன்னவா"

துச்சாதனன் பணிவுடன் பதிலளித்துவிட்டுமெல்ல மெல்ல விகாரமாகச் சிரித்தபடியே என்னை நெருங்கினான். நான் ஓட முயன்றேன் முடியவில்லை என் கைகள் ஒரு கம்பத்தில் பிணைக்கப் பட்டிருந்தன அவை எப்போது கட்டப்பட்டன என்பது எனக்குத் தெரியாது தலையைக் கொஞ்சம் திருப்பினேன். நான் தலை திருப்பிய திசையில் தோழி செம்பவளக்கண்ணி கைகள் பிணைக்கப்பட்டு கம்பத்தில் கட்டப்பட்டிருந்தாள் அவள் உடம் பில் எந்தவிதசைவுமில்லை அரை நிர்வாணமாக இருந்த அவளின் தோற்றம் என்னை மரணத்தை நோக்கி பயணிக் கவைத்தது துச்சாதனனின் உஷ்ணமான மூச்சு என் முகத்தில் படர்ந்தது.

❁ ❁ ❁

"மேகலா உமக்கு அறிவிருக்கே? இஞ்ச வந்து பாரும் என்ன நடந்திருக்கெண்டு" சாப்பாட்டறை யில் இருந்து கத்தினார் கணவர்" என்னப்பா என்ன நடந்தது?" என்றபடி விரைந்தேன் அவர் சுட்டிக் காட்டிய இடத்தில் பலாச் சுளைகள் நிறைந்த பாத்திரம் திறந்து கிடந்தது அதற்குள் ளிருந்து. இரண்டு மூன்று கரப் பான் பூச்சிகள் வெளியேறி ஓடின. "உமக்கு வடிவா மூடி வைக்கத் தெரியாதா?" கோப மாகக் கேட்டார் அவர் "வடிவா மூடித்தானப்பா வைச்சனான் இந்தச் சனியனுகள் எப்படியோ வந்திட்டுதுகள்" நான் மெல்லமாக பதிலளித்தேன் அவர் எதுவும் சொல்லாமல் பலாச் சுளைகளை பாத்திரத்துடன் தூக்கி வெளியில் ஏறிந்தார் நான் எதுவும் செய்ய முடியாமல் அழ ஆரம்பித்தேன்.

## உலகக் காதல்

அனைத்து மக்களின் இத யங்களும் திறந்த வெள்ளை இதயங்களாக இருக்கும். அந்த இதயங்களில் பொறாமை இருக்காது. பளமை பற்றிய அறிவுகூட இருக்காது. வாழ்க்கை என்பது மனித குலத்துக்கான மகத்தான சேவையாக மாறிவிடும் உலகத்தை தங்களது இதயத்தால் அதிகப்படியாகத் தழுவி- பூரணமாக அதனை முழுமனதோடு காதலிப்பவர் களே மகோன்னத் புருஷர்க ளாக விளங்குவார்கள் அந்தப் பெருவாழ்க்கைக்காக எதையும் செய்யத் தயாராவார்கள்



# பாவலன் *பா.சத்தியசீலன் என்ற கவிஞனை நினைவுகூறுதல்.*

கல்வயல் வே.குமாரசாமி

இளம் எழுத்தாளர் சங்க ஆண்டுவிழாவின் கவியரங் கத்திலே கலந்துகொண்ட சத்திய சீலனின் கவிதையைக் கேட்ட பல அன்பர்கள் ஆச்சரியப்பட்டே விட்டார்கள் பல பத்திரிகைகள் அவரது கவிதையைப் புகழ்ந்து எழுதின. அல்லைப்பிட்டியைச் சொந்த ஊராகவுடைய சத்திய சீலன் பயிற்றப் பட்ட ஆசிரியர் பால பண்டிதப் பட்டதாரி, இளம் எழுத்தாளர் சங்கம் நடாத்திய கவிதைப் போட் டியில் "தணியாத ஆவல்" என்ற கவிதை மூலம் முதலாம் பரிசைப் பெற்றவர்.

சோமசுந்தரப்புலவர் நினைவுப் போட்டியில் மூன்றாம் பரிசுக் குத்தகுதியானவர் எனத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்" என்று 1962 இல் இரசிதமணிகனக் செந்தி நாதன் தான் தொகுத்து வெளி யிட்ட "ஈழத்துக் கவிமலர்கள்" என்ற நூலில் சத்தியசீலனை அறி முகஞ்செய்துள்ளார் அந்த அளவி ற்கு அக்காலத்திலேயே கவிஞர் பிரபல்யம் பெற்று விளங்கினார் ஆனால் இன்று எல்லோராலும் மறக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் மறைந்து போய் விட்டார் என்றே நினைக்கத் தோன்றுகின்றது ஒரு நாழிதழ் மட்டும் "குழந்தைக் கவிஞர்" என்று ஒரு மூலையில் ஒரு சிறு செய்தி வெளியிட்டிருந் ததாக ஞாபகம்.

அன்றைய விழாக்களிலே கவிஞர் சத்தியசீலனின் கவிதை யைக் கேட்க வென்றே ஒரு கூட்டம் காத்திருக்கும். அவர் கவிதையை விநியோகம் செய்யும் முறையே ஒரு தனி அலாதி. தானும் சுவைத்து அநுபவித்து அவைக்கு அவற்றை அவர் கைய ளிக்கும் போது சபைபடும்பாடு அவர்கவிதை மொழியும் திறன் அவருக்கே உரியதொன்று. எமது மரபிலக்கணங்களுடன் மொழி யைக் குழைத்து அதிலிருந்து விடுபடாமல் மரபைப்பிளந்து கடைந்தெடுத்துப் புதுப்பிறப் பைக் காட்டும் திறமை கைவரப்பெற்றவர்களுள் சத்திய சீலன் முன்வரிசையில் இருத் தப்படவேண்டியவர். ஏன் தமிழ்க் கவிதையின் பூர்வோத்திரத்தை நன்றாக உணர்ந்து கொண்ட நல்லாற்றல் மிக்க கவிஞன் என்று கூறினால் கூட மிகையாகாது.

நான் சும்மா புளுகித்தள்ளுகின்றேனோ என்று கூட நீங்கள் நினைத்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறில்லை. அந்த அளவிற்கு இன்றைய எமது ஆய்விய லறிஞர்களும் விமர்சகர்களும் மலடு தட்டிப் போய்விட்டார்கள் ஏனெனில் அவர்கள் அநுபவங்களைப் பெற்றுத் தருகின்ற நுண்மாண் நுழைபுலம் மிக்க விமர்சகர்களோ ஆய்வியறிஞர்களோ இல்லாத வறுமையினால் இன்றைய இளைய தலைமுறையினர் உண்மைகளை இனங்காணமுடியாமற் போய்விடுகின்றனர்.

கவிஞரின் "பா" கவிதை நூல் வெளியீட்டு விழா நிறைவுற்ற வேளையில் பேராசிரியர் அ.வி. மயில்வாகனம் அவர்கள் கவிஞரின் மாணவர்களைப் பாராட்டுவதனூடாகச் சத்தியசீலனைப் பாராட்டியவிதம் இன்றும் செவிகளில்ரீங்கார மிடுகிறது.

சிவநேசன் கவிஞரின் "வாணி வரத்தை" பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேற்றினார் அதைப்பார்த்த முருகையன் சொன்னார் "Interpretation of Poetrydinto action" கல்விப்பணிப் பாளரும் நாடகநடிகரும், கவிஞருமான மறைந்த இ.சிவானந்தன் "மாணவர்களது இயக்கம் நன்றாக இருந்தது" என்று பாராட்டினார் வெளியில் வந்த நாடக நெறியாளர், தயாரிப்பாளர் "இனி மேல் இப்படித் தான் நாம் சில வற்றைச் செய்து பார்க்க வேண்டும்" என்றார் உண்மையும் இதுதான் சத்தியசீலனிடம் காணப்பட்ட ஆற்றலை அவரவர் அவ்வப் போது எடுத்துச் சொன்ன தோடு சரி.

நாம் வாழும் காலத்தில் நம்மவர்களுக்கு குறிப்பாக ஆய்வறிஞர்(?)களுக்குச் சொல்லிக் காட்ட வேண்டிய பொறுப்பை இந்த வேளையில் மிகுந்த சலிப்புடன் உணர்கிறேன் இன்றும் கூட தமிழ்க் கவிதைகள் ஏமாற்றுக்கும்பல்களை விட்டு வெளிவந்ததாகத் தெரியவில்லை.

கவிதையளோடு சம்பந்த மில்லாதவன் எல்லாம் கவிதை பற்றி வாந்தி எடுக்கிறான் மொழிச் செழுமையற்ற வெறும் புளிச்சல் வாந்திகளையும் இளிச்ச வாயர் சிலர் கவிதையென்று கொண் டாடிக் குதூகலிக்கின்றனர்.

மறுபுறத்தே அதனோடு கொஞ்சமும் சம்பந்தப் படாத குறளிகள் சில இதேவேளை கவிதையில் வந்த வார்த்தைகளுக்கு அகராதியில் அர்த்தம்தேடி அலையும் வரலாற்று ஆய்வாளர்களால் எப்படி நல்ல கவிதையையும் கவி ஞனையும் இனங்காண முடியும் காட்டமுடியும்? சுயதேட்டமில் லாத வழிமொழிதல் விவகாரத்தை ஆய்வு என்று கூற முடியுமா என்ற வினா இங்கே முன்னெழுகின்றமை தவிர்க்க முடியாததே.

சத்தியசீலனின் பாக்கள். சுற்றிலும் நூறு நிகழ்வன வாழ்வில் அவற்றினைச் சுவைத் திடும் ஒருவன் கற்பனை கொண்டு கடையவும் பிறக்கும்



அமுதினைக் கவிதை என்று அறிவோம். சொற்களைப் புதுக்கி, மிடுக்கொடு நடத்தித், துணிவொடு துணிந்தவை சாற்றி அற்புதமாக அது சில ஆக்கும் ஆற்றலன் சத்தியசீலன். கைத் திறன் கொண்டு கருத்துடன் புனைந்தும், கவிதைகள் உதிப்பது கடினம்! செத்தவை போன்ற பல பல பல சமையும் செய்தியே மிகுவன" உயிரின் முத்திரையான மூச்சு. டையனவாய் உணர்வின் மென் மொழியிலே பேசும் தத்துவமாக அமைவனசில நம் சத்தியசீலனின் தமிழாம்" பல வகைகளிலும் ஒரு முன் னோடியான மஹாகவி அன்று கண்டு கொண்டு பாராட்டிய கவி ஞன் எப்படி இன்றைய தலை முறைக்குத் தெரியாமற்போக முடியும்?.

"சின்னப்பெண் உன்னால் எதிர்க்க முடியாது என்னாலும் இன்னும் சிரிக்க முடியாது" - என்று பெண்ணிலை கண்டு கலங்கிய சத்தியசீலன் அற்புத நயமான கற்பனைத்திறன் படைத்த கலைஞர் தயாரிப்பாளர் நாடகஆசிரியர் எல்லாவற்றுக்கும் மேலாக மஹாகவி, முருகையன், நாவற்குழியூர் நடராசன் போன்றவர்களின் பாராட்டுதல் பெற்ற சிறந்த கவிஞன்...

"புதியதோர் பிறவி... மதங்களின் அலுவல்!

பூதலத் துறவுகள் முறிவில் புதியதோர்- பிறவி-

பலமுறைப் பிறப்புப் "புலவனின் கலைமனத் தலுவல்." என்று கூறிப் பாரதி வழிவந்த பாவலவன் முரண்பட்டு மெய்ம்மை நிறையப் பெற்ற மனித மனப்போக்குகளைக் கூறி வந்த அதேவேளை இயற்கையோடே மக்கள் வாழ்க் கையையும் இணைத்துச் சித் திரித்துக் காட்டுகின்ற சங்ககால இலக்கியப் பண்பையும் சத்திய சீலனின் பாடல்களிலே காணலாம்" "பொழுது எழுந்து ஒளிப் பொங்கல்" என்ற பாடலில்

"கீழை வானிற் பொழுதின்
எழுச்சியாற்

கெட்டொழிந்த திருட்குலம்
ஆனதால்

வாழை ஒன்று குருத்தை
விரித்ததும்

வயலிலே கதிர் சாய்ந்து
கிடந்ததும்

பாளை நன்கு பதிந்து கிடந்திடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனைகள் எங்கும் குலைத்துக் கிடந்ததும்
ஏழை இல்லம் எனும் ஒன்று இருப்பதும்
எல்லவர்க்கும் தெரிய முடிந்தது என ஏழைகள்
வாழ்வையும் எடுத்துக்காட்டி யதோடு மட்டுமன்றி
அலையின் மீதொரு தோணி செலுத்திய
ஆழியாளர் குலத்துடனே பனைத்
தலையின் மீதொரு பாளையிற் பாகமாய்த்
தமிழெடுக்கும் தொழிலவர் மட்டுமோ
கலையின் மீதொரு காதலினால் பல
காவியம் கலை தீட்டும் கலைஞரும்
விலையிலாத உழவர் கொடுக்கும் அவ்
விருந்தருந்த விரைதல் தெரிந்தது -காட்டுவதோடு
வாழ்வு போன்றொரு வாழ்வு நடத்திடும்
வறுமையளரும் வேர்வை சொரிகிற
தோள்களாலே குறையை மறைக்கலாம்
தொழில்களாலே உலகினை ஆளலாம்
தாழ்வெனும் பெரும் பள்ளம் நிறைக்கலாம்
தமிழ்கள் செய்பவர் வாழ்த்தும் பறிக்கலாம்
கேளும் என்று எடுத்து மொழிந்தவையைக்

கேட்டோ அறிந்தோ கொண்டவர் எத்தனைபேர் அவை போகட்டும் ஆய்வாளர் விமரிசகர் எனத் தமக்குத் தாமே முத்திரை குத்திக் கொண்டு பொழு தெலாம் புலம்பி எழுதுபவர் கண்களிலிருந்து இந்தக் கவிஞன் எப்படித் தொலைந்து போனான்.

கடைசியில் இன்று குழந்தைக் கவிஞானக மட்டுமாவது தெரிகின்றதே அந்த அளவிலே ஒரு ஆறுதல்.

சுவைகளை எடுத்துசுருட்டி வைத்து விடும் கலையைக் கவிதைக்குள் காண்கின்ற ஆற்றல் கவனம் எம்மவரிடம் ஏன் செத்துப் போய் விட்டதென்று அங்கலாய்க்க வேண்டியிருக்கிறது. மரபும் முரணும் இணக்கமுற்ற போது பிறந்த புதுமையை வெற்றியை இனங்காணத் தவறும் விமர்சகர்களைப் பற்றி கவலை கொள்ள வேண்டிய தேவையைத் தூக்கி வீசிவிட்டால் எல்லாம் சரியாகி விடும். பாவலன் சத்தியசீலனைப் பற்றிய ஒரு நினைவு கூரலே இது, இக்கவிஞனைப்பற்றி

எழுதுவதாயின் நிறையவே எழுதலாம் தமிழ்க் கவிதை கவிதையின் பூர்வோத்திரத்தை நன்கு உணர்ந்து கொண்ட கவிஞர்களுள் சத்தியசீலனும் ஒருவர் என்பதை யாராலும் விலக்கிக் கூறமுடியாது.

ஈழத்துக் கவிதை உலகில் மன்னனாய் நடைபோட்ட சத்தியசீலனின் பணியைச் சரியான முறையில் மதிப்பிட வேண்டிய இந்த நேரத்தையாவது

கவனத்தில் இன்றைய இலக்கிய உலகம் தவறவிட்டு விடக் கூடாதென்பதே எனது ஆதங்கம். வெறும் புகழுக்காகவும், பதவிக்காகவும், பணத்துக்காகவும் அங்கலாய்த்துத்திரியும் போலி மூதறிஞர்களாலும், பேர்ஆசான்களாலும் பிசங்கிப்போய் இருக்கும் உண்மைகள் நிச்சயம் இளைய தலைமுறைகளால் கழுவி முன் காட்சிக்குக் கொண்டு வரப்பட வேண்டும். சுருங்கச் சொன்னால் விமர்சனத் தடை களால் முன் மறித்துத் திருப்பி அனுப்பப்பட்ட ஒருவராகச் சத்திய சீலனையும் இனங்காண முடிகிறது.

**"ஐயன்மீர் எங்கே தேடி அலைகிறீர்**
**பொய்களின் பின்புறத்துள்ளதே சத்தியம்"**


"அறிவே பலம்"

# "ஸ்ரீராம்"

உங்கள் பாடசாலைப் பிள்ளைகளின் சகல
தேவைகளையும் ஒரே கூரையின் கீழ்
பூர்த்திசெய்ய நாடுங்கள்

**"ஸ்ரீராம்"**

ஆஸ்பத்திரி வீதி
மந்திகை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வால்

## சி.கதிர்காமநாதன்




**"வணக்கம் சேர்"**

"வணக்கம் பிள்ளைகளே! "

"எல்லோரும் இருக்கையில் அமருங்கள் நாங்கள் இண் டைக்கு புதுப் பாடமொன்று படிப்பம். சரி பிள்ளையளே. மான், புலி, கரடி, சிங்கம் இவையெல்லாவற்றையும் என் னண்டு பெயர் சொல்லி அழைக்கிறவை"

நான் கேள்வியை கேட்டபடி அவர்களை நோக்கினேன். கண்கள் பிரகாசிக்க முகத்தில் ஆர்வமுடன் அவர்கள் சொன் னார்கள்.

*"விலங்குகள் என்று அழைக் கிறவை சார்"*

"ஓம் சரியாச் சொன்னி யள் இவைகளை விலங்குகள் அல்லது மிருகங்கள் என்று சொல்லுவினம். இவையளுக்கு எத்தனை அறிவெண்டு சொல் லுங்கோ பாப்பம்?"

ஒவ்வொரு முகத்திலும் ஒவ்வொரு விதமான சந்தே கங்கள் நிழலாடின.

" எட்டறிவு சேர் "
" நாலறிவு சேர் "

மாணவர்கள் பதில் வேறு பட்டது. "கொஞ்சம் பொறுங்கோ பிள்ளையள் விடையை பிழையா சொல்லுறியள். இங்க கவனி யுங்கோ. இப்பநான் சொல் லுறதை நல்லாய் மனசிலபதிச் சுக் கொள்ளுங்கோ. விலங்குகள் எல் லாத்துக்கும் ஐந்தறிவு மனி தர்களுக்குத்தான் ஆறறிவு சரியே. இனி பிள்ளையள் இந்த விலங் குகள் எல்லாத்துக்கும் ஒரு ஒற்றுமை இருக்கு. என்னண்டு யோசித்துச் சொல்லுங்கோ பாப்பம்.

மாணவர்கள் தாமதியாது மூளைக்கு வேலை கொடுத்து விடையைகண்டு பிடித்தார்கள்



"சார் எல்லாத்துக்கும் வால் இருக்கு" கெட்டிக்கார பிள்ளையள் எல்லா விலங்கு களுக்கும் வால் இருக்குது.

நீங்கள் கரடி புலி மான் குரங்கு எல்லாவற்றையும் நேரில பார்த்து இருக்கிறி யளே?"

மாணவர்கள் யோசித்தார்கள் பின் பதில் சொன்னார்கள்

"சேர் நான் படத்தில புலி சிங்கம் பார்த்தனான்"

"நான் வன்னியில இருக் கேக்க கனக்க குரங்கு பாத்தனான்"

"நான் ரீ.வியில எல்லாத் தையும் பாத்தனான்"

"நீங்கள் பார்த்த விலங்கு களுக்கு வால் எப்படி இருந் ததெண்டு சொல்லுங்கோ பாப்பம்?"

"மானுக்கு ஆட்டுக்கு இருக்கிறமாதிரி கட்டை வால் சார்"

"சார்நான் சொல்லுறதைக் கேளுங்கோ சிங்கம் புலிக்கும் வால் பெரிதில்ல."

"குரங்குக்குத் தான் பெரிய்ய வால் அது மரத்துக்கு தாவி பாயேக்க நல்ல வடிவாய் இருக்கும் "

"எப்படி சார் அந்த பெரிய வாலை வைச்சுக் கொண்டு குரங்கு கஸ்ர மில்லாமல் பாயுது?"

அவன் ஆர்வமாக கேட்டான்.

"குரங்கு பாயுறதுக்கு அந்த வால் உந்து சக்தியை கொடுத்து சமநிலையைப் பேணுது நீங்கள் மீன் நீந் தேக்க பாத்து இருப்பியள்."

"பாத்து இருக்கிறம் சார் எங்கட பெரியம்மா வீட்டில தொட்டியில கலர் மீனெல் லாம் வளக்கினம். மீன் நீந் தேக்க வாலையும் செட்டை களையும் அசைத்துக் கொண்டு இருக்கும்"

"சார் மீன் நீந்தாம நிக்கேக்கையும் வாலை அடிச்சுக் கொண்டு தான் நிக்கும் எப்படி ........."

அவன் ஆச்சரியத்துடன் விடையை என்னிடம் எதிர் பார்த்தான்.

"விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் வால் முக் கியமானது அவையள் வாழ்க் கையில் புவியீர்ப்பு விசையை சமப்படுத்தி இயங் குவதற்கு வால் முக்கியமானது கடவுளின்ர படைப்பில வால் அவையளுக்கு மிக முக்கிய மானது என்ன விளங்கிச்சோ?

நான் ஆர்வமாக அவர்களைப் பாத்துக் கேட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"நல்லாய் விளங்கிட்டுது சார்"*

*"சார் எனக்கொரு சந்தேகம்?"*

கேட்டவன் பிரதீபன் வகுப்பில் அதிகம் கேள்வி கேட்காதவன்.

"என்ன சந்தேகம் பிரதீபன்? "

"விலங்குகள் பறவைகள் எல்லாத்துக்கும் வால் முக்கியமான தெண்டு சொன்னீங்கள் அது நல்லா விளங்கினது ஆனால் மனுசரை பார்த்து இவர் அவற்ற "வால்" எண்டு சொல்லுவினம் ஏன்சார்."

பிரதீபன் ஆவலாக என் பதிலை எதிர்பார்த்து நின்றான். ஏன் மற்றவர்களும் இந்த புதுக் கேள்விக்கு பதிலை எதிர் பார்த்து நின்றார்கள்.

இந்தக் கேள்விக்கு எப்படி பதில் சொல்வது? மனிதனுக்கு வாலா இவர் அவற்ற வால் நான் யோசித்தேன்.

"சேர் நானும் உவர் அவற்றை வால் எண்டு சொல்லுறதை கேட்டு இருக்கிறன்.

நெடுக ஒருத்தர் மற்ற ஆளுக்கு பின்னால திரிஞ்சால் "நல்லாத்தான் வால் பிடிக்கிறார் எண்டு சொல்லுவினம் எப்படி சார்?"

வால் இல்லாமல் எப்படி வால் பிடிக்கிறது? மனிசன் பிறக்கேக்க வாலோட பிறந்து இப்ப அது மறைஞ்சு போச்சோ?

எல்லோரும் பெரிதாக சிரித்தார்கள் ஒரு கேள்வியால் எத்தனை சந்தேகங்கள் முளைத்து விட்டன.

"பிள்ளையள் சத்தம் போட்டு சிரிக்காதையுங்கோ எங்களுக்கு ஏதேனும் அலுவல் காரியம் நடக்கிறதுக்கு ஒருத்தரை பிடிச்சால் நடக்கு மெண்டு தெரிஞ்சால் அவருக்கு பின்னால ஆட்கள் திரிவினம். அவையளுக் குத்தான் சனங்கள் வால்எண்டுபேர் வச்சிருக்கினம்."

மணி அடித்தது நான் கிளம்ப தயாரானேன் வகுப்பில் கடைசி வாங்கில் இருக்கும் சுதன் என்னிடம் சொன்னான்.

"சார் ஒரு உண்மை தெரியுது "

என்ன தெரியுது "பூமியில் வால் இல்லாமல் எந்த உயிரினமும் உயிர வாழ முடியாது."


"டேய் சுதன் வாத்தியார் போட்டார்"

"உவர் பிரின்சிப்பலின்ர வால் என்று மற்ற வாத்திமார் கதைக் கிறவை யெல்லே?"

( யாவும் சிந்தனை )



# கவிதைத் தொகுப்பு நூல் விமர்சனம்




# 'ஆச்சி'

## இரா.சடகோபன்

அறுபதுகளில் எழுபதுகளில் பேசப்பட்ட அளவுக்கு சோசலிசக் கொள்கைகளையும் மாக்சியத்தைப் பற்றியும் பின்னர் பேசப்படவில்லை எனலாம். அப் போது சற்று கல்வி கற்றோர் மத்தியில் மாக்சிய சோசலிசக் கொள்கை மிகப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் 1980களின் பின்னர் மாக்சியத்தைப் பற்றி அதனை நன்கு அறிந்தோர் மட்டுமே பேசினர்.

இலங்கையில் தேசிய இனப்பிரச்சனை இந்த மாற்றத்துக்கு பெரும் காரணியாக இருந்தது. உண்மையில் மாக்சிய வாதிகளுக்கு வைக்கப்பட்ட அமிலப் பரீட்சையாகவும் இது அமைந்தது. தேசிய இனப் பிரச்சனை, சுயநிர்ணய உரிமைப் பிரச்சனை முதலான கேள்விகள் எழுந்த போது எந்தப் பக்கம் சார்வது என்று திண்டாட்டமும் இவர்களுக்கு ஏற்பட்டது.

கலைஞர்கள், எழுத்தாளர், கவிஞர்கள் ஆகியோரும் கூட குழம்பிப்போயினர்.

பலர் இனப்பிரச்சனை என்ற வேள்வித்தீயில் வேக்காட்டில் வெந்து சாம்பலாயினர்.

கவிஞர், கலைஞர், எழுத்தாளரான நண்பர் சோ.தேவராஜா போன்றவர்கள் இத்தகைய வேள்வித்தீயில் வெந்து போகாமல் எஞ்சியிருப்போர் என்று கூறலாம். இவர் எழுதி அண்மையில் வெளிவந்துள்ள "ஆச்சி" என்ற கவிதை நூல் மேற்சொன்ன கருத்தையே என்னுள் தோற்றுவித்தது. இதனை வலியுறுத்துவது போலே மேற்படி கவிதை நூலுக்கு முன்னுரை எழுதியுள்ள சி.சிவசேகரம் அண்மையில் மாக்சியங்களுக்கு எதிராக திட்டமிட்ட முறையில் பல பொய்கள் பரப்பப்பட்டு மறுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்சியர்கள் மரபின் எதிரிகள். அவர்கள் மத உரிமைகளை மறுப்பவர்கள் என்ற விதமாக விசமத்தனமாக பிரசாரம் செய்யப்பட்டது. கவிஞர் தேவ ராஜாவின் கவிதைகளி மேற் குறிப்பிட்டவாறான விசமத் தனங்களை மறுக்கும் வலிய வாதங்களாக அமைகின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.

கவிஞர் தேவராஜாவின் "ஆச்சி" என்ற இக்கவிதை தொகுப்பு "ஆச்சி" என்ற உன்னதமான மானிட உறவுக்கு மேலும் மதிப்பளிக்கிறது. தாய், தந்தை, மகன், மகள் உறவுகள் என்பன மக்கள் பராயம் அடையும் வரை மிகப் பலமானதாகவும் மக்கள் பெரியவர்களானதும் பல வீனத்தையும் அடைந்து விடுகின்றன.

இன்றைய நிகழ் காலத்தில் ஆச்சி பேரன் பேத்தி உறவுகளே இடைவெளிகளைத் தகர்க்கும் தொங்கு பாலமாக அமைகின்றன என்பதனை யாரும் மறுக்க முடியாது. ஆச்சியை உண்மை வாழ்க்கையில் தரிசித்தவர்கள் மனித உறவுகளின் மற்றொரு பரிமாணத்தை உணர்ந்திருப்பார்கள்.

திரு. தேவராஜா கவிஞர் என்பதற்கு மேலதிகமாக தான் ஒரு மானிடவாதி என்பதனையும் தான் சார்ந்திருக்கும் மக்கள், பூமி, கலை, கலாச்சாரம், மொழி என்பவற்றின் மீதும் பற்றும் பாசமும் கொண்டவர். என்பதனையும் தன் கவிதை வாயிலாக வெளிப்படுத்து கின்றார்.

இவர் பாடியிருக் கும் அநேகமான கவிதைகள் நிகழ்காலத்துடன் நெருங்கிய முக்கிய நிகழ்வுகளையும், உரிமைப் பிரச்சனையையும் மையமாகக் கொண்டுள்ள இவரது கவிதைகள் இக்காலத்தின் பதிவேடாகவும் ஆவணமாகவும் உள்ளது. என்பதுடன் "எங்கே நாம் தோற்றுப் போனோம்" என்பதையும் அடிக்கோடிட்டு காட்டியுள்ளது.

தனது ஆச்சிக்கு அஞ்சலி செலுத்தி எழுதிய கவிதையில் அவரது ஆதங்கம் பின்வரு மாறு வெளிப்படுகின்றது.

"உன்ரை வயல்வெளி,
உன்ரை பனைவெளி அந் நியாள்
ஒருத்தி ஆளுவது கண்டு மூளும்
உன் கோபம், உன் விழியை
மூடியதோ?"

பருமரங்கள் என்ற கவிதையில் இவர் காணும் நிதரிசனம்.......

"வைரவியின் இரத்தத்தில்,
அரிசிகள் சிதறும்
கர்ப்பிணியின் உடலில்
குண்டுகள் பாயும் கறி
விற்றகைகள் சோரும்
கைக் குழந்தை நிலத்தில்
வீழ்ந்து சாயும் பிணமா
கும் முதலே"



"பேயும் பெருமரமும் என்ற கவிதையில் மீது கேள்வி எழுப்புகிறார்........

மேகம் பேயாகி கட்டுக்
கடங்காமல் நீண்ட பெரு
மரத்தை ஆனமட்டும் அசைத்து
அது முடியாது போக பூவையும்
பிஞ்சையும் காயையுமாக
பெருமரத்தில் இருந்து பெயர்த்து
வீழ்த்தி............

..சிற் சில முயற்சிகள் பழுக்கலாம் வெம்பி "பிணங்களின் மறுபெயர்" என்ற கவிதையில் எவ்விதம் எதிர்ப்பட்ட அப்பாவிகளையெல்லாம் சுட்டு வீழ்த்தி அவர்களுக்கு பயங்கர வாதிகள் என்ற நாமமிட்டனர் என்றும் இது வர்க்கப்போராக வேண்டியதன் அவசியத்தையும் கூறுகின்றார்.

"எழுக யாழ்ப்பாணமே" என்ற கவிதையில் முந்தைய யாழ்ப் பாணத்தின் அழகையும் அமை தியையும் கூறி இன்றைய அழிவை எண்ணி அங்கலாய்ப்பதுடன் மீண்டும் அமைதி வராதா? என்றும் ஏங்குகிறார் "சுடுகாடும் நெருப் பும் வெள்ளமும் புயலும் ஒரு போதும் மக்களை தடுத்திட மாட்டா" என்று அவர் கூவுகின்றார்.

"பக்தர்களும் எதிரிகளும்" என்ற கவிதை 1984 டிசம்பர் வலி மேற்கில் அரசு பிறப்பித்த 62 மணிநேர ஊரடங்கின் போது நிகழ்ந்த பயங்கர வாதங்களை கூறுகின்றது.

கட்டாயம் உள்ளடக்கியே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திலும் எழுதப் பட்டுள்ளதனை சொல்லத் தான் வேண்டும். கவிதை சொல்லும் பாணி, தொனி, தேர்ந்தெடுத்துள்ள சொற்கள் என்பன மக்களை மிக நெருக்கமாகத் தொட்டுத் தடவிச் செல்கின்றன. சில கருத்துக்களை வெளிப்படை யாகச் சொல்லாமல் சொல்லி யிருந்தாலும் புரிந்து கொள்ள முடிகின்றது.

**தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடான இந்நூலின்**

**விலை ரூ. 100\-**

*முகவரி:-*

சவுத் ஏசியன் புக்ஸ்,
44, 3ம் மாடி, கொழும்பு
மத்தியசந்தை தொகுதி,
கொழும்பு - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் பார்த்த படம்

# தெனாலி

பார்த்தவர்:- பேய்க்குஞ்சு

...ன்னால் நம்பமாட்டியள் ஒரு ...கான படம் பார்த்தன். உடம் ...லாம் மயிர்கூச்செறியத் தொடங் ...யிடுத்து. பயத்தில இல்லை வெக் கத்தில, எனக்கு சரியான வெக்க மாப் போச்சு சும்மா சொல்லக்கூடா கமலகாசண்ணை நல்லாத்தான் எங்களை கௌரவப் படுத்தியிருக் கிறார்.அவரின்ரை நடையென்ன?-- கதையென்ன?.

இந்தப் படத்தைப் பாத்தாப் போலதான் எனக்கொரு யோசனை வந்தது சொல்ல வெக்கமாக் கிடக்கு......" எண்டாலும் சொல் லுறன் கேளுங்கோ.

நானும் ஒரு பேய்க் குஞ்சு சரியான பயந்தவன். எல்லாம் சிவமயம் எண்டு சொல்லுவினம் எனக்கு எல்லாம் பயமயம் தான். நானும் இந்தியா போப்போறன். அங்கபோய் ஒரு டாக்குத்தரிட்ட என்ரவருத்தத்தைச் சொல்லப்போறன். அந்த டாக்குத்தர் என்னை இன் னொரு டாக்குத்தரிட்ட அனுப்புவர்.

அந்த டாக்குத்தருக்கு ஒரு தங்கச்சி அதோட அவருக்கு பெஞ்சாதி பிள்ளையள் எல்லாம் இருக்கும்.

அந்தடொக்டரின்ரை சிஸ்ரர் என்ர பேய்க்குஞ்சுத் தனத்தை பாத்திட்டு விரும்பத் தொடங்கி யிடுவ. அந்தக் குடும்பம் ஒண்டாயிருக்கேக்க அந்த டொக்ரர் "ஆச்சும்" எண்டும் தும்முவர். உடனே குடும்பத்தில உள்ளவை எல்லாம் பாடுவினம். நானும் இடையில பாடுவன்

**"சமரசம் செய்ய பேய்க்குஞ்சு**

**வந்தானே..**

**புட்டுக்குழலுக்கு**

**தேங்காய்ப்பூவைப் போல**

**ஒண்டு கலந்திட நெஞ்சு**

**துடிக்குது--**

**கவிதைபோல் உள்ள**

**குடும்பத்தில் நானும் ஒரு**

**வார்த்தை யாகலாமோ?.?.."**

என்ன சிரிக்கிறியளோ? அதுதான் முதலே எனக்கு வெக்கமா இருக்கெண்டு சொன்ன னான். இன்னும் கொஞ்சமிருக்கு கேட்டுப்போட்டுச் சிரிக்கிற தெண்டால் சிரியுங்கோ. ம்....

பிறகு அந்த டொக்ர ரின்ரை சிஸ்ரரும் நானும் தனிய ஒரு மலைக்கு மேல இருப்பம். அது கேக்கும் "உங்க ஊரில பொஞ்சாதி புருஷன எப்பிடிக் கூப்பிடுவாங்க?" எனக்கு ஒரே வெக்கமாப்போம். எண்டாலும் என்ன செய்யிறது என்ர கிளிக் குஞ்சு கேக்கேக்க நான் வெக்கப் பட்டுக்கொண்டிருக்கேலுமே. நான் சிரிச்சுப்போட்டுச் சொல்லுவன்.

"ஹி... ஹி.... இஞ்சேருங்கோ.. ஹி... ஹி.. இஞ்.. சருங்...கோ..." எண்டுதான் கூப்பிடுவினம். உடன அது என்னைப் பாத்துக் கூப்பிடும் "ஹி... ஹி... இஞ்.. சருங்.. கோ. ஹி.. இஞ்ச.. ருங்.. கோ" அதில ஒரு பாட்டு வரும் ஒச்சாரே---அச்சாரே--- இச்சாரே---" இதுக்கு மேல எனக்கு சொல்லேலாது, சரியான வெக்க மாக்கிடக்கு.

இன்னுமொரு விசயம் கமலகாசண்ணை கையெடுத்து "செல்வச்சந்நிதியானே" எண்டு கும்பிடேக்குள்ள நானும் மெய் மறந்து ரீவிப்பெட்டியை கை கூப்பிக் கும்பிட்டுப் போட்டன்.

அப்துல்ஹமீட் அண்ணையைத் தான் உண்மையாப் பூப்போட்டுக் கும்பிடவேணும். எங்கட துன்ப கரமான வாழ்க்கையை நகைச் சுவைச் சித்திரமாக்க நல்ல சேவை தான் செய்திருக்கிறார் போங்கோ. எங்களுக்கு இடுக்கண் வருங்கால் நகுக" எண்டு நினைச் சிட்டார், கடைசியா கமலகா சண்ணைக்கு சிரம் தாழ்த்தி கரம்கூப்பி நன்றி தெரிவிக்காமல் போக மனம்வரேல்ல, அண்ணை கமலகாசண்ணை எங்கடை யாழ்ப் பாணத்தமிழுக்கு உங்களால எவ் வளது புகழ்வந்து சேந்திருக்கு தெரியுமே, எனக்கு மேலெல்லாம் புல்லரிக்குது, ஏதேனும் செய்ய வேணும் போலகிடக்கு..

"ஆ---யாழ்ப்பாணத் தமிழைப்பேசி நடித்த மறத்தமிழன் கமல காசண்ணை வாழ்க... ஒச்சாரே... ஒச்சாரே..."

## மனித வாழ்வின் வெறுமதி

மனிதனை இதுவரை வழிப் படுத்தி வந்த அனைத்து தத்து வங்களை மதங்கள் அறஒழுக்கக் கோட் பாடுகள் அனைத்தையும் விட மாக்சிசம் விஞ்ஞானத் தையும் மனச்சாட்சியையும் இணைப்பதிலும் அறிவியலையும், ஆன்மபலத்தையும் இணைப் பதிலும் வெற்றி கண்டுள்ளது மனிதவாழ்வின் பெறுமதியை பொருளாதாரப் போட்டிச் சந்தை யில் வைத்து எடைபோட முடியாது

*- ஹேகோஷ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுதல்கள்

***த.ஜெயசீலன்***

I

தூங்கிக் கிடந்த அடிமைத்தனம் தகர்த்து
ஓங்கிக் குரல் கொடுத்த
உலக...முதல் முதுகெலும்பே,...
ஜூலியர் சீசர், உன் முகத்தை நான் காணவில்லை
அடிமைப் படுத்துவொரின்
ஆணிவேரும் அன்றுதொட்டு
நடுங்கத் தொடங்கியதாம்! புதுவீர நாற்றுநட்ட
உன்"முஷ்டி" தொட்டு முத்தம்
இடக் கொடுத்து வைக்கவில்லை!

II

நாகரீகம் என்றதெல்லாம் நாய்ச்செயலிலுங் கீழாய்ப்போய் "ரோமின்"
பேரரசர் பேயாட்டம் போட்டநாளில்,
அடிமைகளை மோதவிட்டு, விலங்குகளைச் சீறவிட்டு,
மரணத்தின் ரத்தத்தை மனம்ரசித்து,, பொழுதுபோக்கும்
"கொலோசிய" அரங்குகளில்,
கொண்டுவந்த அடிமையான...
"கிளாடியேற்றர் – ஸ்பாட்டக்கஸ்"... நீ நிமிர்ந்தாய் உல குறைய!
உனையும் தரிசிக்க, என்னால் முடியவில்லை,
எனினும் அடிமைகளின் எழுச்சியினைத் தூண்டியநின்
வரலாற்றைக் கேட்டபின்னென்
மனம் குனிந்து சோரவில்லை!

ஜூலியர் சீசர்!
என் அன்பான ஸ்பாட்டக்கஸ்!
கொலோசியத்தை"ப் போற்தானே எந்தன் குடிநிலமும்
அவலக் குரலெழுப்பி, ரத்தக் குளமாக,
பலர்பார்த்து இரசிக்கப் பலியாகி, வரலாறு....
பெரிதாக மாறாமற் பிரஸ்வதனைச் சொல்லுது! உம்
இவரது நினைவுகள் தான்
"இதுள்" இருக்கும் எந்தனுக்கு
ஆறுதலைத் தருகிறது!
அகத்தில் ஒளி ஏற்றுகுது



# பயங்கரவாதத்தின் அடித்தளம்

உலகை ஒருமுறை அதிர்ச்சிக்குள்ளாக்கிய அமெரிக்கா மீதான தீவிரவாதிகளின் தாக்குதலும் அதற்குப்பதிலடியாக உலகம் எதிர்பார்த்த ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பும் தொடர்ந்து நடைபெறுகிறது.

அமெரிக்கா தான் நீதியின் பக்கம் நின்று உலகப் பயங்கரவாதத்தின் பிதாமகன் எனத் தான் கருதும் உசாமா பின்லேடனுக்காக ஆப்கானிஸ்தான் நாட்டுக்கு எதிராகப் போராடுவதாகக் கூறுகிறது. அமெரிக்காவின் இத்தாக்கு தலால் கொன்று குவிக்கப்படும் ஆப்கான் மக்கள் அதனைக் கொடூரமான பயங்கர வாத நடவடிக்கை என்று கூறுகின்றனர். இதில் எது உண்மையான அடிப் படையானபயங்கரவாதம் என்பதை (உலகப்) பொறுப்புணர்வுடன் அடையாளம் காணவேண்டிய தேவை மக்கள் முன் மீண்டும் ஒருமுறை எழுந்துள்ளது.

ஏது மறியாத பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களை தாக்குதல் இலக்குக்குள் உட்படுத்தி பெரும் மனித அழிவை ஏற்படுத்திய நடவடிக் கையை அவர்களது எதிர்ப்புணர்வில் நியாயம் இருந்தாலும், நாம் சரியென ஏற்று மகிழ்வடைய முடியாது. அது தவறானது. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான துயரும் தீரமும், தியாகமும் மிக்க பலஸ்தீன மக்களின் போராட் டத்தின் பக்கம் நின்று பார்த்தாலும் கூட நல்ல விளைவுகளை இது தருமா என்பது கேள்விக்குறியாகும்.

இத்தகைய விமர்சனம் பாதிக்கப்பட்ட அமெரிக்க மக்களின் சார்பாக எழவேண்டுமேயன்றி உலகை தனது காலடியில் போட்டு மிதிக்க எண்ணும் அமெரிக்க ஆளும்கும்பலின் இரத்தக்கறை படிந்த அரசுயந்திரத்துக்குச் சார்பாக இம்மியளவும் அமைய முடியாது.

அமெரிக்க ஆளும் வர்க்கமும் அதன் உலகக் கூட்டாளிகளும் தமது நலன்களைக் காப்பதற்காக உலகின் பல நாடுகளின் மக்கள் மீது, பலதசாப்தங்களாக தொடர்ந்து வரும் அரச பயங்கரவாத நடவடிக்கை களினால் பல இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் பல கோடிக் கணக்கானோர் பாதிக்கப்பட்டு வருவதும் உலகறிந்த உண்மை. புள்ளி விவரங்களுடன் கூட இவை நிரூபிக்கப்படலாம்.

பயங்கரவாதம் மட்டுமல்ல, அதன் விளைநிலமான ஆக்கிரமிப்பும், சுரண்டலும் ஒடுக்குமுறையும் நிறைந்த -நீதியும் சமத்துவமும் அற்ற உலகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார சமூக அமைப்பும் மிகக் கொடியது, இதனால் ஏற்படும் யுத்தங்களும் அழிவுகளும் நாகரிகமடைந்த மனித சமூகங்களால் வெறுத்தொதுக்கப்பட வேண்டியவை. ஆனால் இத்தகைய ஒரு உலக அமைப்பைக் கட்டிக்காக்கவே அமெரிக்கா தனது பொருளாதார இராணுவ கருத்தியல் பலத்தை உலகெங்கும் கட்டி எழுப்பி வருகிறது.

பணவலுமூலம் தனிமனித, சுயநல மேம்பாட்டுக்கே சேவை செய்யப் பணிக்கப்பட்டிருக்கும் அறிவியலும் விஞ்ஞானமும், யுத்தமில்லாத உலகை உருவாக்க முனையவில்லை. நாடுகளுக்குள்ளும் மக்களுக்கிடையேயும் வேறுபாடுகளை வளர்க்கவும் போட்டிகளை உருவாக்கவும். அவர்கள் தம்மைத் தாமே அழித்துக்கொள்ள அதி நவீன அணுவாயுதங்களையும், உயிரியல் இரசாயண அழிவுக் கருவிகளையும் உருவாக்கவுமே பணிக்கப்பட்டிருக்கிறது.

பயங்கரவாதம் தனியே ஆயுதங்களுடன் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல அரசியல் பொருளாதார நடவடிக்கைகளுக் கூடாகவும் அது செயற்படுத்தப் படுகிறது எமது கல்விமான்கள் சிலர் வியந்து கூறும் அமெரிக்க பொருளாதா ரக் கொள்கையினாலும் உலக வங்கியின் எதேச்சதிகார நடவடிக்கை களாலும் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பட்டினி, வறுமை நோய். பிணிகளுக்கு உள்ளாக்கப்பட்டு சாகடிக்கப்படுகின்றனர். சட்டம், நீதிக்கு உட்பட்ட புதிய உலக ஒழுங்காக -- வசதிபடைத்த சமூகத்தின் அமைப் புரீதியான அங்கீகாரத்துடன் இது செயற்படுத்தப்படுகிறது.

இத்தகைய கொடிய சமூக உலக அமைப்புக்கெதிரான அறிவியல் பூர்வமான விமர்சனங்களை மழுங்கடிப்பதற்கே மதஅடிப்படைவாதத்தை அமெரிக்கா தூண்டி வளர்த்தது. எண்பதுகளுக்குப் பின்னர் பொதுவுடமை நாடுகளுக் கெதிராக ஆப்கானிஸ்தான், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் இது நடைபெற்றது. உசாமா பின்லேடனையும் தலிபான் தீவிரவாதிகளையும் உருவாக்கியவர்கள் இவர்களே. முன்பு பொதுவுடமை நாடுகளை எதிப்பதாகக் கூறி தனது ஆதிக்கத்தை வலுப்படுத்திய அமெரிக்கா இன்று "உலக பயங்கரவாத" எதிர்ப்பு என்ற போர்வையில் தனது ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்த முனைகிறது.

உலகமக்கள் இன்று விழிப்படைந்து வருகின்றனர். உலக அரசியலில் சில தசாப்தங்களாக கட்டியெழுப்பப்பட்ட அமெரிக்கா பற்றிய மாயை மீண்டும் தகர்ந்து வருகிறது. அதன் அதிகாரவெறி பிடித்த நடவடிக்கை களுக்கும், யுத்தத்துக்கும், பயங்கரவாதத்துக்கும், தோற்றுவாயாக உள்ள அதன் பொருளாதார, கலாச்சார, நடவடிக்கைகளுக்கு எதிரான பரந்துபட்ட உலக மக்களின் விழிப்புணர்வும், எதிர்ப்பலைகளுமே அதன் அடித்தளத்தை உறுதியாக அழிக்கவல்லது.

*பரமன்*




நியூ விமாகி



மாபிள் பொருட்கள் விற்பனையில் வட பகுதியில் முன்னணி ஸ்தாபனம்

தலைமைக் காரியாலயம்:
நியூவிமாகி,
51, டாம் வீதி,
கொழும்பு-11.
T.P. No. 423030
Fax.No. 074-720567

நியூ விமாகி,
27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் மழலைச் செல்வங்களின் உயிரோவியமான
புகைப்படங்களை கலரில் எடுத்துமகிழ
இன்றே விஜயம் செய்யுங்கள்

BABY PHOTO பேபி போட்டோ

பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

சுவைப் பிரியர்களின் நண்பன்

கண்ணன் லொட்ஜ்

சுவையான காலை, மதிய, மாலை உணவுகளுக்குத்
தவறாது நாடவேண்டிய உணவகம்

கண்ணன் லொட்ஜ்

வளாகச் சந்தி . திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.
Registered as a News Pepar in Sri Lanka.

HERO SUPER COMPLEX


HSC

**Dealers -**

TV, Radio, V.CR, Taperecorders, Fancy Items,
Stationery Items, Cassetes, Video Cassetes.



ஹீரோ சுப்பர் கொம்பிளக்ஸ்



**விற்பனையாளர்கள்-**

TV, டெக், றேடியோ, கசட்றெக்கோடர்,
பன்சிப்பொருட்கள், ஸ்டேசனரி பொருட்கள்,
வீடியோ, ஓடியோ கசட்வகைகள்.

*Main Street,*
*Nelliyady, Karaveddy.*

பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

இச்சஞ்சிகை தேசிய கலை இலக்கியப் பேரவைக்காக யாழ்ப்பாணம் 405, ஸ்ரான்லி வீதி, வசந்தத்திலுள்ள க. தணிகாசலம் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.
Registered as a News Pepar in Sri Lanka.



HERO SUPER COMPLEX

HSC

Dealers -
TV, Radio, V.CR, Taperecorders, Fancy Items,
Stationery Items, Cassetes, Video Cassetes.



ஹீரோ சுப்பர் கொம்பிளக்ஸ்



விற்பனையாளர்கள்-
TV, டெக், ரேடியோ, கசட்றெக்கோடர்,
பன்சிப்பொருட்கள், ஸ்டேசனரி பொருட்கள்,
வீடியோ, ஓடியோ கசட்வகைகள்.

*Main Street,*
*Nelliyady, Karaveddy.*

பிரதான வீதி.
நெல்லியடி. கரவெட்டி.



இச்சஞ்சிகை தேசிய கலை இலக்கியப் பேரவைக்காக யாழ்ப்பாணம் 405, ஸ்ரான்லி வீதி, வசந்தத்திலுள்ள க. தணிகாசலம் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org